பக்கங்கள்:19 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விழுயல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை 24.07.2022 கதிர் 261

**இனி இது ரகசியம் அல்ல!**

கடந்த வியாழனன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமநீதியரசர் முன்னிலையில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்டம் உடனடியாகவே ஆரம்பமானமை பற்றி கொழும்பு வட்டாரங்களில் ☞2

# சம்பந்தனை விலகுமாறு கோருகின்றார் செல்வம்

## கூட்டமைப்பின் தலைவர் பதவி இனி கூட்டுத் தலைமையிலாம்




கொழும்பு, ஜூலை 24

தற்போதைய நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியிலிருந்து இரா. சம்பந்தன் விலகிக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்தார். ☞2

# ராஜபக்ஷக்களை விட ரணில் அரசு மோசம்!

## மறைமுகமாகச் சாடுகின்றார் சஜித்




மக்கள் ஒன்றிணைந்து ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுத்து முன்னாள் பிரதமரையும் முன்னாள் ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், அதன் பின்னர் எழுந்த மாற்று அணி முன்னைய நிலையை விட பாரதூரமானது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ☞4

## மனித உரிமைகள் பாதுகாப்பு அனைத்தையும் விட முக்கியம்

### அமெ. செனட் குழுத் தலைவர் கருத்து

அனைத்தையும் விட மனித உரிமைகள் பாதுகாப்பு முக்கியமானது என அமெரிக்க செனட்டின் வெளியுறவு குழு தெரிவித்துள்ளது.

“இலங்கையின் பாதுகாப்பு படையினரின் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் குறித்து அச்சமடைந்துள்ளேன். இலங்கை ஜனாதிபதியை இலங் கை மக்களின் ஜனநாயக அபிலாசைகளுடன் ஈடுபாட்டை காட்டுமாறும் பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் பரந்துபட்ட ☞2

## நாளை முதல் வாரத்தில் 3 நாள்களே பாடசாலை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் தொடங்கவுள்ளன என்று கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல் வரை, திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் பாடசாலைகள் நடத்தப்படும் என்றும், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்தே கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்றும் கல்வி அமைச்சு ☞2

## இ.போ.ச. யாழ் ஊழியர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு



இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ் சாலை ஊழியர்கள் இன்றையய தினம் பணிப் பகிஷ்கரிப்பைமேற்கொள்ளத்தீர்மானித்துள்ளனர் என அறிவித்துள்ளமையுடன் யாழ் ☞2

## ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை பேணும் வழியைப் பாருங்கள்

### அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நொட்டல்

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்காக மேற்கொண்ட உடன் படிக்கைகளை முழுமையாக பாதுகாத்துக் கொள் ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அர சாங்கத்திடம் அறிவித்துள்ளது.

காலிமுகத் திடலில் எதிர்ப்பு ☞2

## ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது ஏன்?

### பொலிஸ் பேச்சாளர் விளக்கம்



ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கூடியிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்காத காரணத்தினாலேயே அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:- ☞2

### காலிமுகத்திடல் தாக்குதலைக் கண்டித்து

## கடற்படையில் எவரும் பதவி விலகவில்லை




கொழும்பு – காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் அதிகாலை, ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து கடற்படை சிப்பாய்கள் இருவர் பதவி விலகினர் என்று வெளியான சில சமூக ஊடகச் செய்திகளை இலங்கை கடற்படை ☞2

## கண்ணி அகற்றும் பணியாளர் வெடிப்பில் சிக்கிப் படுகாயம்

கிளிநொச்சி – முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஹலோ ட்ரஸ்ட் ஊழியர் ஒருவர் கண்ணிவெடி வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார்.

இவர் பணியின் இடையே நேற்று மதியம் உணவு அருந்திவிட்டு கை கழுவும் போது நிலத்தில் பொருள் ஒன்று இருப்பதை கண்டுள்ளார்.அதனை எடுத்து நிலத்தில் குற்றிப் பார்த்தபோது அது வெடித்துச் சிதறியுள்ளது. அவர் கை சிதறிப் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து ☞2

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் இலங்கை நிலை குறித்து அச்சம்

கொழும்பில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகிலுள்ள போராட்ட முகாமை அகற்றுவதற்கு, பாதுகாப்புப் படையினர் தேவையற்ற பலத்தைப் பயன்படுத்தி கூறப்படுவது தொடர்பில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் பீதியடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஜெனீவா மனித உரிமைகள் அலுவலகப் பேச்சாளர் ஜெரமி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன்போது போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் மீது தடியடி நடத்தப்பட்ட ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகம் பேசப்படுகின்றது.

அன்று நாடாளுமன்றத்தை விட்டு ஜனாதிபதியாகப் புறப்பட்ட ரணில், வாசலில் தமது வாகனத்தை நிறுத்தி, அதில் இருந்து இறங்கி, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைப் பாதுகாத்து வந்த முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு நன்றி தெரிவித்த போதே அடுத்து என்ன செய்வதென்றஅவரின்திட்டம்தயாராகிவிட்டது.

நேரடியாகக் கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்குப் போய் அவருக்கு நேரில் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில், அங்கு மஹிந்தருடன் தனிமையில் சுமார் ஒன்றரை மணி நேரம் விரிவாகக் கலந்துரையாடி வியூகம் வகுத்தார் எனத் தெரிகின்றது. வேறு ஆள்கள் இன்றி, இருவரும் மனம் விட்டுப் பேசினர். புதிய அமைச்சரவை ஒழுங்குகள் வரை பல விடயங்கள் அங்கு பேசப்பட்டன என ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

அடுத்து அங்கிருந்து நேரடியாக பாதுகாப்பு அமைச்சில் முப்படைத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்தார் புதிய ஜனாதிபதி. அப்போதுதான் தமது கடுமையான நிலைப்பாட்டை, காரமான சொற்களால் சீற்றத்துடன் முன்வைத்தார் புதிய ஜனாதிபதி எனக் கூறப்படுகின்றது. நாட்டின் மிக முக்கிய – மைய – தளமான ஜனாதிபதி செயலகத்தைப் பாதுகாக்க முடியாத முப்படைகளாக நாட்டிலிருந்து நாட்டில் வேறு எதைப் பாதுகாக்க போகின்றீர்கள் என்று தளபதிகளைப் பார்த்து நாக்கைப் பிடுங்குமாற்போல கேள்வி எழுப்பினார் ரணில்.

நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக 88 – 89 களில் ஜனாதிபதி பிரேமதாஸா எப்படிப் பணியாற்றினார், எத்தகைய துணிச்சலான நடவடிக்கைகளை தூரப்பார்வையுடன் திடமாக எடுத்தார், மோசமான நிலைமையை எவ்வாறு கையாண்டு ஜனநாயக நாட்டைக் காப்பாற்றினார் என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு விவரித்தார் ஜனாதிபதி ரணில்.

சில உயிர்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பையும் கோட்டை விட முடியாது என்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் நிலைப்பாட்டையும் வழிகாட்டலையும் முழு அளவில் பின்பற்றுங்கள் என்றார் அவர்.

நிலைமை கட்டாயப்படுத்துமாயின் 1988 ஆண்டு காலத்தில் ஜே.வி.பி. நெருக்கடியைக் கையாண்டமை போல இப்போதும் நடந்து கொள்ள வேண்டி வரலாம் எனக் கோடி காட்டினார் அவர். நாடும், அரசமைப்பும், ஜனநாயகமும், சட்டம் ஒழுங்கும்தான் தமக்கு முக்கியம் என்றார் அவர்.

"என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ தெரியாது. நான் திங்களன்று ஜனாதிபதி செயலகத்திலிருந்து பணியாற்ற வேண்டும். அதற்கு இடையில் விடயங்களை 'க்ளியர்' பண்ண வேண்டும். அதற்காக ஆள்களைச் சுட்டு தள்ளத் தேவையில்லை. ஆகக்குறைந்த பலத்தை பிரயோகித்து விரைந்து விடயத்தை முடியுங்கள்" – என்ற சாரப்பட புதிய ஜனாதிபதி வழங்கிய கடும் உத்தரவு தளபதிகளுக்குச் சரியான புரிதலைத் தந்தது.

அதன் பின்னர்தான் இரவோடு இரவாகத் திட்டங்கள் தீட்டப்பட்டு, விடிகாலை ஒப்பரேஷன் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

பாதுகாப்பு உயர்மட்டக் கூட்டத்தில் ரணில் சிங்கம் போல சீறிக் கர்ஜனை செய்த விடயம் வெளியில் பரவி, ஆர்ப்பாட்டக்காரர் தரப்பு அலேர்ட்டாகி, அணி சேர்வதற்கு முன்னர், விடயத்தை கனகச்சிதமாக ஒப்பேற்றி விட வேண்டும் என்பதற்காகவே விவகாரம் இவ்வளவு அவசர அவசரமாக, ஆளரவமற்ற விடிகாலை வேளையில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

பாதுகாப்பு விடயங்களை இவ்வளவு நிர்வாக ஒழுங்கில், கடுகதி வேகத்தில், கனகச்சிதமாகக் கையாளும் அரசுத் தலைவரைத் தாம் முன்னர் கண்டதில்லை என ஒரு தளபதி வியப்புடன் குறிப்பிட்டார் என அறிய வருகின்றது.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஜனாதிபதியாக விடாமல் முட்டுக்கட்டை போட்டுக் குழப்பியமையின் பின்னாலிருந்த புலிகளின் கணக்கீடுகள், மதிப்பீடுகளின் நியாயத்தையும் புதிய பரிமாணத்தில் இப்போது ஓரளவு ஊகிக்க முடிகிறது.

ஜனாதிபதி பொறுப்பை ரணிலிடம் ஒப்படைத்தமையில் மஹிந்தர் உச்சத் திருப்தியிலும் மன ஆறுதலிலும் இருக்கின்றாராம். கோட்டாவிடம் அப்பதவியை ஒப்படைத்த காலத்திலிருந்து அரச மற்றும் குடும்ப விவகாரங்களை ஒட்டி தொடர்ந்து பதற்றத்தில் இருந்த மஹிந்தர், இப்போது சரியானவரிடம், சரியான சமயத்தில், பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கருதி நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார் என்றும், மஹிந்தர் – ரணில் 'கெமிஸ்ட்ரி' நன்றாக உச்சப் புரிந்துணர்வுடன் திகழ்கின்றது என்றும் கூறப்பட்டது.

புதிய ஜனாதிபதி – 'ரணில் விக்கிரமசிங்க'வாக இருந்து விட்டுப் போகட்டும்; 'ரணில் ராஜபக்ஷ'வாக மாறாமல் இருக்க வேண்டும்.

– மின்னல் –

## நாளை முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

அவ்வாறில்லாவிடின் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இணையவழி கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஐ.நா. மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்திகளையும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் கண்டித்துள்ளது.

அத்துடன் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க முடியவில்லை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலக பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆர்ப்பாட்டங்களைக் கண்காணித்து அறிக்கையிடுவதற்கு உரிமையுடையவர்கள். எனவே இந்தச் செயற்பாடுகளை எந்த வகையிலும் தடை செய்யக்கூடாது என்று மனித உரிமைகள் அலுவலக பேச்சாளர் வலியுறுத்தினார்.

எனவே, அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக பலாத்காரம் பயன்படுத்துவது சர்வதேச சட்டத்திற்கு முரணானது எனவும், அவ்வாறான பலத்தை பயன்படுத்துவதை அதிகாரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது.

இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை பலவந்தமாக தீர்க்க முடியாது எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பரந்த ஆலோசனைகள் மற்றும் உரையாடல்களின் மூலமே, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் இலங்கையர்கள் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பாடுபடுமாறு நான் வலியுறுத்திக் கேட்கின்றேன். அனைத்தையும் விட மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும். என்றும் செனட் வெளியுறவு குழு தலைவர் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்

## கண்ணி அகற்றும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம்தொடர்பில்பளைபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜீ.எஸ்.பி. வரிச் ,,,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து இலங்கையில் பொருளாதார மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக தம்மை தொடர்ந்தும் அர்ப்பணிப்பதாக தெரிவித்துள்ளது.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கும், பேச்சு சுதந்திரத்திற்குமான பொதுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி கொள்கைகளை பாதுகாப்பதற்கும் நிலையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்தசிலவருடங்களில்இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் 01 பில்லியன் யூரோக்கள் உதவி வழங்கியுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## சம்பந்தனை விலகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அதில் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்குச் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அளித்த பதில்களும் வருமாறு:-

**கேள்வி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார்? எம்.ஏ.சுமந்திரனா?

**பதில்:-** அடுத்த தலைமை என்று பார்க்கின்றபோது அது கூட்டுத் தலைமை – அதாவது சுழற்சி முறையிலான தலைமையாகத்தான் – இருக்கும். எம்.ஏ. சுமந்திரனைத் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர் புதிதாக வந்தவர். எங்களைப் பொறுத்த வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சுழற்சி முறையிலே இருக்க வேண்டும். தற்போது சம்பந்தன் தலைவராக இருக்கும்போது அடுத்த தலைமை சம்பந்தமாக நாங்கள் இன்னமும் அவருடன் பேசவில்லை. ஆகவே, சம்பந்தனுக்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்பது கூட்டுத் தலைமையாக – சுழற்சி முறை தலைமையாகத்தான் – இருக்கும். இதிலே தனிமனித தலைமையை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

**கேள்வி:-** கூட்டுத் தலைமை, அதாவது சுழற்சி முறை தலைமை என்றால் எவ்வாறு அமையும்?

**பதில்:-** தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் தற்போது மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. தமிழரசுக் கட்சி, எமது ரெலோக் கட்சி, புளொட் கட்சி ஆகியன கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையிலேயே சுழற்சி முறை தலைமை ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை வருடங்கள் என்று பிரிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு யாப்புத் தயாரிக்கப்பட வேண்டும். அது பதியப்பட வேண்டும். அந்த அடிப்படையில் சுழற்சி முறையிலான தலைமைத்துவம் ஜனநாயக ரீதியாக வரவேண்டும்.

அந்த ரீதியிலேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் செயற்படும் என்பதை நான் குறிப்பிட்ட விரும்புகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தனிமனித தலைமைத்துவம் சம்பந்தன் ஐயாவுடன் முற்றுப்பெறும்.

**கேள்வி:-** இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் பேசியிருக்கிறீர்களா?

**பதில்:-** இன்னும் இல்லை. அவர் இப்போது உடல்நிலை சரியில்லாமல் இருக்கின்றபடியால் இந்த விடயத்தை அவரிடம் நேரில் இடித்துரைத்துக் கூற விரும்பவில்லை. சந்தர்ப்பம் ஏற்படும் போது கட்டாயம் அதை நாங்கள் செய்வோம். ஏனென்றால் சம்பந்தன் ஐயாவால் இயலாமல் இருக்கின்றது. எனவே, இந்த விடயத்தில் ஐயா கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக சர்வகட்சி அரசு அமைந்தால் – அதில் சஜித் பிரேமதாஸவின் கட்சியினர் பங்கேற்றால் – அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான். இந்நிலையில், சம்பந்தன் ஐயா வயது முதிர்ந்த நிலையில் அந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பொறுப்பேற்க முடியாது. ஆகவே, தற்போதைய நிலைமையில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். கூட்டுத் தலைமைக்கு அதாவது சுழற்சி முறைதலைமைக்கு அவர் இடம் கொடுக்க வேண்டும். இது தொடர்பில் விரைவில் – சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அவருடன் பேசிப் பார்ப்போம்.

**கேள்வி:-** கூட்டுத்தலைமை என்றால் நீங்கள் (செல்வம் அடைக்கலநாதன்) அல்லது சித்தார்த்தன் தலைமைத் துவத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்?

**பதில்:-** ஆம், அப்பிடித்தான் வரும். இதுவரை காலமும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பிலேதான் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் ஐயா பதவி வகிக்கின்றார். ஆகவே, நாங்கள் மூன்று பேரும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் அந்தத் தலைமை தாங்கும் வாய்ப்பை ஏற்படுத்துவோம்.

## ஆர்ப்பாட்டக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆர்ப்பாட்டக்காரர்களால் நீண்ட காலமாக ஜனாதிபதி செயலகத்துக்குள் பிரவேசிக்கும் பிரதான நுழைவாயில் மறிக்கப்பட்டிருந்த நிலையில், அங்கிருந்து வெளியேறுமாறு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்ட போதிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

பொதுமக்களுக்கான முடிவுகளை எடுப்பதற்கான பிரதான அலுவலக அமைப்பாகக் காணப்படும் ஜனாதிபதி செயலகத்தை நிறைவேற்று ஜனாதிபதி நியமிக்கப்பட்டதன் பின்னர், விடுவிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

எனவேதான் அங்கு கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது – என்றனர்.

## இ.போ.ச. யாழ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாலை முடங்குவதால் அதனுடன் இணைந்த சாலைகளின் செயற்பாடுகளும் பாதிக்கப்படுமென தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே யாழ்.சாலை ஊழியர்கள் கூட்டாக இதனை அறிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெள்ளி இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச. பஸ்ஸின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச. சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களே எமது சக ஊழியர்களைத் தாக்கியமை எமது ஊழியர்களுக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலோடு தொடர்புபட்ட ஊழியர்களை உடனடியாக பொலிசார் கைது செய்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்.சாலை வட பிராந்திய சாலைகளுடன் இணைந்து தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம் – என்றனர்.

## கடற்படையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறுத்துள்ளது.

ஜனித் ராஜகருணா மற்றும் மல்ஷான் பிரதாபசிங்க ஆகிய இரண்டு கடற்படை அதிகாரிகளும் 'கோட்டா கோ கம' மீதான கொடூரத் தாக்குதலைக் கண்டித்து இலங்கை கடற்படையில் இருந்து விலக முடிவு செய்துள்ளனர் என்று சமூக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும், அத்தகைய செய்திகளை இலங்கை கடற்படை மறுத்துள்ளதுடன், சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டபடி இலங்கை கடற்படையிலிருந்து எவரும் விலகவில்லை என்று கூறியுள்ளது.

அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் மாத்தறையைச் சேர்ந்தவர் என்றும், அவரொரு படைவிட்டோடி என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

அவருக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை கடற்படை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## ரயிலில் இருந்து தள்ளி விழுத்தி

# பாதுகாப்பு உத்தியோகத்தரை படுகொலைசெய்த பயணிகள்

குடிபோதையில் இருந்த ரயில் பயணிகள் இருவர், ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை ரயிலில் இருந்து உதைத்துத் தள்ளி விழுத்திப் படுகொலை செய்துள்ளனர்.

நேற்று காலை வெயங்கொடைப் பகுதிக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடிபோதையில் இருந்த ரயில் பயணிகள் இருவர் ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கொழும்பு - யாழ்ப்பாணம் இன்டர்சிட்டி ரயிலில் இருந்து உதைத்துத் தள்ளி விழுத்தியதில் குறித்த பாதுபாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.







### மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-02.10.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-மிருகசீரிடம்
**கி.பா**-40
**செவ்**-5ல்
**தகைமை**-AERO DISINER
**தொழில்**-UK,PR இந்தியா வந்து திருமணம்
**எதிர்பார்ப்பு**- UK இந்தியா இலங்கை மணமகள் தேவை

**பிறந்த திகதி**-15.11.1979
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-உத்தரம் 2
**கி.பா**-32
**செவ்**-12ல்
**தகைமை**-BANKING
**தொழில்**-U.K PR
**எதிர்பார்ப்பு**- U.K O R EURUP உள்ள மணமகள்

**பிறந்த திகதி**-25.03.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-அச்சுவினி
**கி.பா**-46
**செவ்**-8ல்
**தகைமை**-I.T DIPLOMA
**தொழில்**-STESANMSTER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரச சேவை மணமகள்

**பிறந்த திகதி**-15.12.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-சதயம்
**கி.பா**-46
**செவ்**-3ல்
**தகைமை**-COMPUTER ENG
**தொழில்**-TELECOM ENG
**எதிர்பார்ப்பு** - BANK OR அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-30.04.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-உத்தரட்டாதி
**கி.பா**-33
**செவ்**-2ல்
**தகைமை**-ELECTONIC ENG
**தொழில்**-(விரிவுரையாளர்) அரசசேவை
**எதிர்பார்ப்பு** - பட்டதாரி மணமகள்

**பிறந்த திகதி**-26.12.1989
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-கேட்டை
**கி.பா**-34
**செவ்**-5ல்
**தகைமை**-G.C.G A/L
**தொழில்**-ECT BORT அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை காரைநகர் முன்னுரிமை

**பிறந்த திகதி**-15.11.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-சித்திரை
**கி.பா**-21
**செவ்**-9ல்
**தகைமை**-G.C.E/L
**தொழில்**- FILED OFFICER அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள் தேவை

**பிறந்த திகதி**-09.10.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-ரேவதி
**கி.பா**-31
**செவ்**-10ல்
**தகைமை**-B.SC SOFTWARE ENG
**தொழில்**-SOFTWARE ENG
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி மணமகள் தேவை

### மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-12.04.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பூரட்டாதி 2
**கி.பா**-28
**செவ்**-1ல்
**தகைமை**-B.SC I.T
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- CANADA UK, SINGAPOUR. FRANCE மணமகன்

**பிறந்த திகதி**-18.09.1996
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம் 2
**கி.பா**-24
**செவ்**-6ல்
**தகைமை**-B.B.ST
**தொழில்**-.DEMO (விரிவுரையாளர்)
**எதிர்பார்ப்பு**- DOCTOR, ENG பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-26.07.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மிருகசிரிடம் 2
**கி.பா**-17
**செவ்**-4ல்
**தகைமை**-B,SC
**தொழில்**-BANK OFFICER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-06.09.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-33
**செவ்**-12ல்
**தகைமை**-B.SC
**தொழில்**- .DEVELAPMENT OFFCER
**எதிர்பார்ப்பு**- அரச உயர் பதவி மணமகன்

**பிறந்த திகதி**-09.08.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அச்சுவினி
**கி.பா**-16
**செவ்**-7ல்
**தகைமை**-BISNESS MANAGMENT
**தொழில்**- U.S.A PR
**எதிர்பார்ப்பு**- U.S.A NEWYORK மணமகன் தேவை

**பிறந்த திகதி**-24.06.1977
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-53
**செவ்**-2ல்
**தகைமை**-B.B M.S
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- UK.AUSTRILYA, CANADA, U,S.A. பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-30.10.1997
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-சித்திரை 1
**கி.பா**-34
**செவ்**-4ல்
**தகைமை**-G.C.E A/L
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு PR இலங்கை வரும் மணமகன்

**பிறந்த திகதி**-04.09.1992
**மதம்**-RC
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-கேட்டை 3
**கி.பா**-8
**செவ்**-3ல்
**தகைமை**-HOTTEL MANEGMENT
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு-அரசசேவை மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.












காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சும்மா ஆடாது சோழியன் குடுமி!

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருக்கின்றார். அவர் அரசியலில் நரித் தந்திரசாலி என்று விமர்சிக்கிப்படுபவர். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கின்றவர். இப்போதும் கூட அந்தக் கவனத்தை அவரது செயற்பாடுகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கு முன்னர் ஆறு தடவைகள் அவர் பிரதமராக இருந்திருக்கின்றார். முதல் தடவை தமது கட்சியின் ஜனாதிபதியான டி.பி. விஜேதுங்கவின் கீழ். மற்றவை முறையே சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் கீழ். இந்த மூவருமே அவரது கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த மூவரின் கீழும் பிரதமர் பதவி வகித்தபோது அவர் நினைத்ததைச் செய்யும் பிரதமராக இருக்கவில்லை. இருக்கின்ற ஜனாதிபதிகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டிய பிரதமராகவே இருந்தார்.

ஆனாலும், சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த சமயம் 2001 டிசெம்பரில் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் முப்படைகளின் தளகர்த்தரும் தலைவருமான ஜனாதிபதி சந்திரிக்காவுக்குத் தெரியாமலேயே – அவருக்குக் காட்டி அனுமதி பெறாமலேயே – விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்தார். 2004 ஏப்ரலில் ரணிலின் அந்த அரசு கலைக்கப்பட்ட பின்னரும் கூட, ரணில் விக்கிரமசிங்க புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட அந்த ஒப்பந்தத்தைப் பின்பற்ற வேண்டியவரானார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஆனால், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமை வேறு. இப்போது அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி. முழு அதிகாரமுமே அவரிடமே உண்டு. எனினும் இப்போதும் கூட அவர் கண்ணுக்குத் தெரியாத அரசியல் சக்திகளுக்கும் அழுத்தங்களுக்கும் கட்டுப்பட்டே செயற்பட வேண்டியவராக இருக்கின்றார் என்பது தான் மறைக்கப்பட முடியாத உண்மை.

தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகத் தனி ஆவர்தனம் வாசித்துக் கொண்டிருநத ரணில் விக்கிரமசிங்கவிடம் முதலில் பிரதமர் பதவியையும் தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியையும் ராஜபக்ஷக்கள் கண்ணை மூடிக் கொண்டு வாரி வழங்கி, தானம் செய்துவிட்டுப் போய் விடவில்லை.

வெளியே தெரியாத – எழுதப்படாத – சில, பல புரிந்துணர்வுகளுடன்தான் இணக்கநிலைமை ஏற்பட்டு, விடயங்கள் முன்நகர்ந்தன என்று பேச்சுகள் உண்டு.

பாதுகாப்புச் செயலாளர் உட்பட பாதுகாப்புக் கட்டமைப்புகளில் பதவி நிலைமைகள் மாற்றமின்றிப் பேணப்படுகின்றமை அந்த இணக்கத்தின் வெளிப்பாடே.

இரண்டு மாதங்களில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் விசேட கவனிப்புக்கு உள்ளாகவுள்ளது. இலங்கைக்கு எதிராகக் காட்டமான புதிய பிரேரணைக்கான வாய்ப்புகள் கருக்கட்டியுள்ளன.

இந்தச் சமயத்தில் அவ்விடயத்தை இலங்கைத் தரப்பில் கையாள வேண்டிய வெளிவிவகார அமைச்சர் பதவி ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக இலங்கையில் தொடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், மோசடி நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகள் யாவற்றிலும் கோட்டாபய சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றிதான்.

ஜெனிவா அமர்வில் கோட்டாவின் கடந்த கால மனித உரிமை மீறல்கள் குறித்த விடயங்களும் ஆய்வுக்கு எடுக்கப்படும் போது இலங்கைத் தரப்பில் அதனை கோட்டாபயவின் நிரந்தர சட்டத்தரணியே நேரடியாகக் கையாள வசதியாக அலி சப்றியை வெளிவிவகார அமைச்சராக்கியிருக்கின்றார் ரணில்.

சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை.

# புதிய அமைச்சரவையும் அவர்களின் பதவியேற்பும் ஜனநாயகத்துக்கு விரோதமான ஒரு செயற்பாடே!

## சிறிதரன் எம்.பி. காட்டம்

புதிய அமைச்சரவையும், அமைச்சர்களின் பதவியேற்றமும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டிய நிலையில், இப்போது அமைக்கப்பட்டிப்பது சுயநலமான ஓர் அரசாங்கம். புதிய ஜனாதிபதி அவர் சுயவிருப்பத்தின்படியே இந்த அரசாங்கத்தை அமைத்துள்ளார்.

புதிய ஜனாதிபதியும் ஜனநாயகத்துக்கு எதிராகவே தெரிவு செய்யப்பட்டுள்ளார். மக்கள் ஆதரவு அவருக்கு இல்லை. வரலாறு உரிய பாடத்தை உரிய நேரத்தில் அவருக்குக் கற்பிக்கும்.

மேலும், அமைதியான போராட்டக்காரர்கள் மீது வன்முறையை பிரயோகித்தது மிக மோசமான ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் எனத் தெரிவித்தார்.

# புதிய அமைச்சில் பதவி தந்தாலும் அதை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

## இராதாகிருஷ்ணன் திட்டவட்டம்

புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சுப் பதவிகள் கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

பதவியேற்ற புதிய அமைச்சர்கள் அனைவரும் ராஜபக்ஷ ஆதரவாளர்களே. புது முகங்கள் எவருக்கும் பதவிகள் வழங்கப்படவில்லை. ராஜபக்ஷ அரசாங்கத்தின் பின் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் ரணிலின் தலைமையில் பதவியேற்றுள்ளனர். மொட்டு அரசாங்கம் மீண்டும் ஆட்சியில் இறங்கியுள்ளது.

இது நாட்டில் எதிர்ப்பார்த்த எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஜனாதிபதியின் பேரில் மாத்திரமே மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தவிர ஜனாதிபதி மாறவில்லை.

மேலும், வெள்ளிக்கிழமை அதிகாலை காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதல், அரசாங்கத்தின் அடக்குமுறையை காட்டுகின்றது. – எனத் தெரிவித்தார்.

# போராட்டக் குழுவினர், ஊடகவியலாளர்மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்!

## சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு

ஜனநாயக வழியில் போராடிய போராட்டக் குழுவினர் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

காலி முகத்திடலில் ஜனநாயக வழியில் போராடிய போராட்டக் குழுவினர் மீதும் அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர்கள் மீதும் அரச இயந்திரத்தால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் பிரதிபலிக்கப்படாவிட்டாலும் சகோதர சிங்கள தேசத்தின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற போராட்டம் என்ற ரீதியில், அங்கே மேற்கொள்ளப்படுகின்ற சர்வாதிகாரத்தையும் அராஜகத்தையும் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகச் செயற்படுகின்ற நாங்கள் கண்மூடி மௌனிகளாகப் பேசா மடந்தைகளாகப் பார்த்துக்கொண்டிருப்பது தமிழினத்தின் அரசியற் பண்பாட்டுக்கு முரணானது.

இந்தத் தாக்குதல் புதிதாகப் பதவியேற்ற அரச நிர்வாகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பதைத் துலாம்பரமாகக் காட்டிநிற்கின்றது.

ஜனநாயகப் போராட்டங்களை ஆயுதத்தால் அடக்க முற்படுவது அராஜகத்தின் உச்சக்கட்டம். பேனாமுனைகொண்டுசெயற்படும் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படும் ஊடகத்துறையை நசுக்கி அடக்க முற்படுவது கோழைத்தனத்தினதும் முட்டாள்தனத்தினதும் அதியுச்சமாகப் பார்க்கப்படவேண்டி யது.

ஜனநாயக விழுமியங்களின் மீது தொடுக்கப்படும் எத்தகைய அச்சுறுத்தல்களுக்கும் எதிராக என்றும் எங்கள் குரல்கள் ஓங்கி ஒலிக்கும். அரச இயந்திரத்தினதும் இராணுவத்தினதும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஊடக உறவுகளுக்கும் எமது ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம். – என்றுள்ளது.

---

# ராஜபக்ஷக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிய ஜனாதிபதி நியமனம் செய்யப்பட்ட மறுநாள் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சியின் வகிபாகத்தை நிலைநாட்டும் அதேவேளையில், நாடாளுமன்றக் குழு முறைமையின் ஊடாக அரசின் சாதகமான செயற்பாடு களுக்கு ஆதரவளிப்பதாக நான் சுட்டிக் காட்டினேன்.

சர்வகட்சிகளும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சி இதுவே. அதை விடுத்து சர்வகட்சி ஆட்சி என்பது அமைச்சுப் பதவிகள் பெற்று வரப்பிர சாதங்கள், சலுகைகளைப் பெற்று நாடக அரங்கேற்றங்களை மேற்கொள்வதல்ல.

நாடாளுமன்றத்தில் 225 பேரும் ஒரே மாதிரி என்ற நிலைப்பாடு பொருத்தமல்ல. அது 134 என்பதே சரியானது.

மக்கள் சக்திக்கு முன்னால் அரசு தோற்கடிக்கப்படும் என்பது உறுதி. அதன் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொது உடன்பாட்டை உருவாக்க வேண்டும்.

அனைத்து வெகுஜன தொழிற்சங்கங்க அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் போன்றவற்றை ஒன்றிணைத்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் திட்டவட்டமான புரிந்துணர்வு எட்டப்பட வேண்டும். அதற்காகத் தேசிய பேரவை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தைப் பயன்படுத்த இடமளிக்கின்றேன். தேசிய சபைக்கு வரும் முற்போக்கான முன்மொழிவுகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

நடந்தது ஒரு ஜனாதிபதித் தேர்தல் அல்ல. இடைக்கால ஜனாதிபதியை நியமிப்பதற்காக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பே உண்மையில் இடம்பெற்றது. நாட்டில் மக்கள் அபிப்பிராயம் முற்றாகத் திரிவுபடுத்தப்பட்டுள்ள போதிலும், நாடாளுமன்றத்தின் நிலைமை அவ்வாறானதாக இல்லை என்பதை முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டுதான் அதற்கு நாம் முகம் கொடுக்க முன்வந்தோம் – என்றார்.

பனைத் தொழில் பழகு..



கரும்பனையேற்றம் பழகி பனைத் தொழில் வல்லுனராக வேண்டுமா?

பதநீர் மற்றும் பனங்கள் உற்பத்தியாளர்களிற்கான பயிற்சி

இந்திய மற்றும் உள்ளூர் துறைசார் வல்லுனர்களினால் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தியும் பாதுகாப்பான முறையில் பாரம்பரியமாகவும் பதநீர் மற்றும் பனங்கள் உற்பத்தியாளர்களிற்கான பயிற்சிநெறியினை யூலை இறுதி வாரத்திலிருந்து நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியின் பிரதான உள்ளடக்கங்கள்

- பனை ஏறுதல் (பாரம்பரிய முறை மற்றும் கருவிகள் மூலமான எளிய முறைகள்)
- பனை மரத்தினை சுத்தம் செய்தல்
- பனம் பாளைகளை பக்குவப்படுத்தி பதநீர் மற்றும் கள் இறக்குதல்
- பதநீரில் இருந்து பெறுமதிசேர் பொருட்களின் உற்பத்தி
- பனையோலை பின்னல் பயிற்சி

அனுமதி - இலவசம்




| மட்டக்களப்பு | மன்னார் | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 26.07.2022 - 28.07.2022 | 29.07.2022 - 31.07.2022 | 01.08.2022 - 03.08.2022 |

பனைசார் உணவு உற்பத்தியும் தரக்கட்டுப்பாடும்

பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் (VTASL) இணைந்து நடாத்தும் பனைசார் உணவு உற்பத்தியும் தரக்கட்டுப்பாடும் NVQ மட்ட 6 மாதகால கற்கை நெறி.
நேரடி விளக்க வகுப்புகள் மற்றும் கள விஜயங்கள்
பயிற்சி முடிவில் VTA தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

- அனுமதி - இலவசம்
- பயனாளர்கள் - பயிற்சிநெறி ஒன்றிற்கு 20 பேர் மட்டுமே. சிறிய நடுத்தர தொழில் முனைவோர் மற்றும் ஆர்வமுள்ளோர் பங்குபெறலாம்.



HACCP சார் உணவு பாதுகாப்பு முகாமைத்துவ கற்கைநெறி

ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவகம், பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை இணைந்து நடாத்தும் மேற்படி கற்கை நெறி இரு மாத காலங்களிற்கு நடாத்தப்படவுள்ளது.

- பயிற்சி நெறி கட்டணம் - 15,000.00
- பயனாளர்கள்: சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர்.



உணவுற்பத்தி பொருட்களிற்கான தரநிர்யண ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல்

பனைசார் மற்றும் பனை சாரா உள்ளூர் உற்பத்திப் பொருட்களிற்கான
- நிறக்குறியீடு
- போசனை உள்ளடக்கங்கள்
- தரக் கட்டுப்பாட்டு அளவீடுகள்

போன்றவற்றுக்கான தரநிர்ணய அறிக்கைகளை பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடங்களில் இருந்து கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.



பனை ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் பெறப்படும் புதிய பனைசார், பெறுமதி சேர் உற்பத்திகளிற்கான பயிற்சிகளினை தொழில் முயற்சியாளர்கள், எவரேனும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| மாசி - பங்குனி | - | பனங்கிழங்கிலிருந்து உற்பத்திகள் |
| மாசி - வைகாசி | - | பதநீர், பனங்கள் சார் உற்பத்திகள் |
| வைகாசி - ஆனி | - | நுங்கு சார் உற்பத்திகள் |
| ஆவணி - கார்த்திகை | - | பனங்களி சார் உற்பத்திகள் |

மேலதிகமாக எமது புதிய கண்டுபிடிப்புகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை உரிமத்தினை தனிநபர் மற்றும் பங்குதார நிறுவனங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் கட்டணம் செலுத்தி எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஸ்ரீவிஜேந்திரன்,
பிரதிப்பொது முகாமையாளர் மற்றும்
முகாமையாளர் ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாடு,
பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, கைதடி.

மேலதிக தகவல்களுக்கு
பனை ஆராய்ச்சி நிறுவகம், கண்டி வீதி கைதடி
தொ. பே. இல: 021 205 7065 / 077 378 7380

# போராட்டம் நடத்தும் மக்களின் உரிமையை அடக்க முயன்றால் நிலைமை மோசமாகுமாம்!

## ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கர் எச்சரிகை



காலிமுகத்திடல் போராட்ட களத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புகள் கடுமையாகக் கண்டித்துள்ளன. ஊடகவியலாளர் உட்பட அனைவருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாகக் கவலையடைகிறேன் என கொழும்பில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கர் கூறியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல் கொடுப்போர் போராட்டங்கள் தொடர்பாக ஆராய உரிமை இருப்பதாகவும் அவர்களின் செயற்பாடுகளுக்கு தடையேற்படுத்தக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை கலைக்க பலத்தை பயன்படுத்தியமை சம்பந்தமாக உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அமைதியாக போராட்டத்தை நடத்தும் உரிமையை அடக்க முயற்சிப்பதன் மூலம் நாட்டுக்கு அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை மேலும் மோசமான நிலைமைக்கு செல்லும் எனவும் ஹெனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை அமைதியான எதிர்ப்புகளில் ஈடுபட இருக்கும் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன் தெரிவித்துள்ளார்.

கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல தரப்பினர் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

# பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்குமுன்னர் தற்போதைய பிரச்சினைகளில் கவனம் தேவை!

## தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(க.கிருபாகரன்)

பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு, இறுதி முடிவு எடுப்பதற்கு முன், நடைமுறையான தீர்வுகளை அரசாங்கம் வழங்க வேண்டும் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தீர்வுகளை வழங்காமல் பாடசாலைகளை மீள திறப்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுப்பது வீண் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.


புதிய பாடசாலை தவணை ஆரம்பத்தை ஜூலை மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கல்வி அமைச்சு எடுத்த தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் கல்வி சேவைக் குழுக்கள் உட்பட பல தரப்பினருடன் பேச்சு நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சின் போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள், போக்குவரத்தைப் பாதுகாப்பதில் உள்ள சிரமங்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், அவர்களின் பிரச்சினைகளுக்கு அமைச்சு தீர்வுகளை வழங்கத் தவறியதால், அவர்களின் முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படவில்லை.

பேச்சு முடிவடைந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகியும், பாடத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் நேரப் பற்றாக்குறையை அதிகாரிகள் கருத்திற் கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# மருத்துவக் கதிர்



## பெண்களை பாதிக்கும் வெரிகோஸ் வெயின்ஸ்

வெரிகோஸ் வெயின்ஸ் என்பது நரம்பு சுருட்டி கொள்ளும் ஒரு வகை நோய். இது ஆண்களை விட பெண்களை அதிகம் பாதிக்கிறது. பெண்களுக்கு சுரக்கும் ஹார்மோன்கள் தான் இந்த பிரச்சினை ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைகிறது. 30 வயதுக்கு மேல் 70 வயது வரை உள்ள பெண்களுக்கு இந்நோய் ஏற்படுகிறது. கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச்சினை என்பது கால்களில் உள்ள நரம்புகள் புடைத்துக் கொள்வது.

இதயம் தான் உடல் உறுப்புக்கள் அத்தனைக்கும் ஒட்சிசன் நிறைந்த ரத்தத்தை பம்ப் செய்து அனுப்புகிற முக்கிய இடம் என்று எல்லோருக்கும் தெரியும். இதற்கு கால் நரம்புகளில் உள்ள வால்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவை பழுதடைந்தால் நரம்புகளில் அடைப்பு ஏற்பட்டு, அவை கால்களிலேயே தங்கி விடும். தலையிலிருந்து, கால் வரைக்கும் இந்த ரத்தத்தை கொண்டு போகும் ரத்தக் குழாய்களை வெயின்ஸ் என்பர் .

காபனீர் ஒக்ஸைட் கலந்த ரத்தத்தை மறுபடி இதயத்துக்கு கொண்டு செல்வதும் இதே வெயின்ஸ் தான். இப்படி ரத்தம் இதயத்துக்கு போக கால் தசைகளும் பம்ப் மாதிரி உதவி செய்யும். அப்படிப் போகும்போது , கால்களில் உள்ள நாளங்கள் வீங்கி, புடைத்து ரத்த நாளங்களில் உள்ள வால்வுகள் பலவீனமாக இருந்தாலும் வெரிகோஸ் வெயின்ஸ் வரலாம்.

உடல்பருமன் உள்ளவர்கள், கர்ப்பிணி பெண்கள், அதிலும் குறிப்பாக அதிக குழந்தைகள் பெறும் தாய்மார்கள், மெனோபாஸ் காலத்தை நெருங்குபவர்கள் எல்லோருக்கும் இந்த பிரச்சினை வரும் .

பரம்பரை ரீதியாகவும் குறிப்பிட்ட பெண்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் . இதை தடுப்பது மிகவும் கடினமானது. காரணம் மனிதர்கள் கால்களில் தானே நடக்கிறோம்? இருப்பினும் இந்நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை சிலர் முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பதன் மூலம் தடுக்க முடியும்.

வரமுன் தவிர்ப்பது தான் இதுக்கான முதல் முயற்சி. அதன்படி ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்வது முக்கியம். தவிர உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், நீண்ட நேரம் நின்றபடியே பணிபுரிவதைத் தவிர்ப்பது, நார்ச்சத்து நிறைந்த உணவு வகைகளை அதிகம் உண்பது. கால்களில் எப்போதும் சாக்ஸ் உபயோகிப்பது நல்லது.



மேலும் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு மருந்து கொடுத்து குணப்படுத்தலாம். முதலில் சுருண்ட நரம்புகளை முற்றிலுமாக பழைய நிலைக்குக் கொண்டு செல்லவோ, குணப்படுத்தவோ முடியாது.

ஊசி மூலம் குணப்படுத்துதல் ஸ்கெலரோதெரபி என்று பெயர். ஆனால் இந்த முறையை பின்பற்றினால் நீண்ட நாள் பின்பற்றவேண்டும். இடையில் நிறுத்தினால் முழுப் பயன் கிடைக்காது. அறுவை சிகிச்சை முறையிலும் இந்நோயை குணப்படுத்தலாம்.

பழுதடைந்த நரம்புகளில் லேசர் பிளமென்ட் மூலம் அடைப்பது நவீன முறையாகும். இந்த சிகிச்சை முறையில் சில கெடு பலன்கள் உள்ளன.லேசர் சிகிச்சை மூலம் வெளியாகும் அதிக பட்ச வெப்பம், கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

ரேடியோ அலை சிகிச்சை (Radio Frequency Ablation RFA) இப்புதிய முறை பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. காரணம் இந்த சிகிச்சை முறையில் வலி மிகக் குறைந்த அளவில் இருக்கும். மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறாமல், புறநோயாளிகளைப் போல சிகிச்சை பெற்றாலே போதும்.

பாதிக்கப்பட்ட பகுதியில் மரத்துப் போவதற்கான ஊசி செலுத்தப்படும். இந்த சிகிச்சை முறையால் ரத்த அடைப்பு ஏற்படுவதில்லை. மேலும் அருகிலுள்ள திசுக்களும் பாதிக்கப்படாது. அதிக வெப்பமும் வெளியேறுவதில்லை. பாதிக்கப்பட்ட நரம்புகள் மூடப்பட்டவுடன், அருகிலுள்ள ஆரோக்கியமான நரம்புகளில் ரத்தம் பாயத் தொடங்கும். இதனால் கால்கள் பழைய நிலைக்குத் திரும்பும்.

## நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த உதவும் அன்னாசிப் பழம்



அன்னாசி பழத்தில் அதிக அளவில் விற்றமின் A சத்து உள்ளது. விற்றமின் A சத்தானது பார்வைக் குறைபாடு ஏற்படாமல் தடுக்க உதவுகிறது. அன்னாசி பழத்தில் விற்றமின் C அடங்கியுள்ளது. இதில் கொழுப்புச்சத்து குறைந்த அளவிலும், நார்ச்சத்து அதிகமாகவும் நிறைந்துள்ளது. மேலும் ஆன்டி ஆக்ஸிடண்ட்ஸ் நிறைந்துள்ளது. இதனை தினமும் உண்டு வந்தால் உங்களின் நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவடையும்.

தொண்டைப் புண், தொண்டையில் ஏற்படும் சதை வளர்ச்சி, நல்ல குரல் வளம் பெற அன்னாசிப்பழச் சாறு அருந்தி வரலாம். அன்னாசி பழ சாற்றால் வாய் கொப்பளித்தால் தொண்டை அழற்சி குணமாகும்.

அன்னாசிப் பழத்தில் அதிக அளவு கல்சியம் மற்றும் மக்னீசியம் உள்ளது. இது எலும்புகளின் வலிமையினை அதிகரிக்கின்றது.

அன்னாசிப் பழத்தில் விற்றமின் A என்னும் உயிர்சத்து அதிக அளவில் உள்ளது, பல வியாதிகளை குணப்படுத்தும் அரிய மருந்தாகவும் அன்னாசி விளங்குகிறது. உடலில் போதுமான ரத்தம் இல்லாமல் இருப்பவர்களுக்கு அன்னாசிப்பழம் சிறந்தது.

அன்னாசி பழத்தில் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளதால் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது. மேலும் ஜீரண மண்டலத்தினை வலுப்படுத்துகிறது.



## நச்சுக்களை வெளியேற்ற உதவும் மஞ்சள்

மஞ்சளில் புரதம், நார்ச்சத்து, விற்றமின் E, நியாசின், விற்றமின் C, பொற்றாசியம், தாமிரம் (காப்பர்), இரும்பு, கல்சியம், மக்னீசியம், துத்தநாகம் போன்ற ஊட்டச்சத்துகளும் தாதுக்களும் நிறைந்துள்ளன.

மஞ்சள் கலந்து செய்யப்பட்ட உணவுகளை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடலில் தங்கியுள்ள நச்சுக்கள், குடற் பூச்சிகள் போன்றவை நீங்கும்.

முகப்பருக்கள், கொப்பளங்கள், இவைகளை போக்க மஞ்சள் சிறந்தது. பாலில் மஞ்சளை சேர்த்து குடித்து வந்தால் உடல் இரதம் சுத்தமாவதோடு இதய நோயை கட்டுப்படுத்துகிறது.

முட்டையும், மஞ்சளும் நல்ல சூடு பாலில் சேர்த்து குடித்து வந்தால் நெஞ்சு சளி, இருமல் விரைவில் குணமாகும்.

மஞ்சளில் குர்குமின் வேதிப்பொருள் இருப்பதால், இது எல்.டி.எல். கொழுப்பைக் குறைத்து அதன் ஒட்சியேற்றத்தைத் தடுக்கிறது.

மஞ்சள் அழற்சி எதிர்ப்பு பண்புகளை கொண்டுள்ளது. சருமத்தில் ஏற்படும் தடிப்புகள், வீக்கம் போன்றவற்றை குணப்படுத்த உதவுகிறது.

புண்கள் மீது மஞ்சளை தடவி வந்தால் இயற்கையான கிருமிநாசினியாக செயல்பட்டு, புண்களில் கிருமித்தொற்று ஏற்படாமல் காத்து புண்களை வேகமாக ஆற்றுகிறது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page 1 English for all Sunday the 24th of July 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# UNDERGROUND ADVENTURE



John and his brother Jack were fond of stories about far away places. But their parents did not allow them even to read fairy tales. They forced the boys to study day and night and so they were very sad about it. One midnight their nurse whispered to them ," Please come with me", and the boys tiptoed after her. She began to narrate an interesting story.

"One fine morning some children were playing in a ground covered with lushy green grass. Two boys among the kids ran toward a greenhouse there. When they entered it they fell deep down into a cave. It was pitch dark inside it. " What has happened to us ?" the boys cried in fear. In a few minutes they fell fast asleep. When they woke up they heard the swishing of wings. Then there came a giant flying in through the window. The giant saw the two boys and he flung some magical powder on the boys. And they vanished from the scene in no time."

Now the boys found themselves in a big beautiful palace. The servants there told the boys they were very busy working to welcome their Queen and she was a cruel lady. The boys walked up the stairs to the first floor. To their surprise they found many small bags full of gold coins. They took two bags of gold, one for each and walked on. They



looked through a glass window there and saw the Queen resting in her chamber. One of the boys dropped his bag of gold carelessly on the floor made of oak planks mak-



ing a big noise . The Queen rushed out and stared at the boys through her red furious eyes.

The clever boys managed to escape from there and hid themselves behind the birch trees . Then they rushed down the snowy slopes sledging down hills. They reached a cotton field ; then a thick woods and finally came to a river bank. They rowed with the water current and was amazed to find that they had again come closer to their green grounds where they were playing. They were delighted that they were now safe closer home. It was an interesting and thrilling adventure for the boys "

John and Jack enjoyed the exciting story their nurse related to them. They thanked her again and again and asked her to tell them more stories every night.

*L. Mathurangan*

# Cat And Mouse In Partnership

Cat And Mouse In Partnership story are about "A cat is a mouse's best friend." – the old saying goes. In this case, a very literal interpretation of that sentiment is made possible through a partnership between Basil and his feline comrade, Leo. Together, they work to.

This is the Cat And Mouse In Partnership story for kids. This story has been adapted from the great work of Brother Grimms. You may like to read SNOW WHITE AND ROSE RED STORY

Once upon a time, there lived a cat and a mouse in partnership in the same house. They were best of friends and shared a great bond of friendship. They shared every household work and everything was equally divided amongst them. Soon as the winters were approaching, they decided to store up some food for themselves. You may also like to read, The Mouse Maid.

On the very next day, they went to the market and bought a little pot of fat. But they did not know where to put it. After thinking for a while, the cat suggested to hide it behind the shrine of the church. They both agreed and went to hide it away from the other cats and mice. But, the cat had a great longing for it and soon she made a plan to steal the entire pot of fat.

One day, the cat went to the mouse and said, "My cousin has a little son and has invited me to the godmother of that little kitten." The mouse trusted the cat but she went straight to the church, slunk to the little pot of fat, began to lick it and licked the top off. This was her first steal. In the evening, she returned home happily. When the mouse curiously asked the child's name, the cat replied, "Top-off!" The mouse was shocked at the name.

A few days later, the cat again started to crave for the pot of fat. Whenever she thought about the little pot of fat, she licked her lips. This time, the cat said, "I have been asked to be the godmother to another child!" The kind mouse agreed. The cat hurried to the church and ate up half of the pot of fat. When the cat returned, the mouse



was very excited to kno
the mouse, this time the
was again surprised at

Not long after this, a
always, the cat made th
ate up all the remaining
sleek and satisfied. The
name. This time, the na
was totally confused a
word. From then on, n
anymore. Also, read Th

Soon as the winters
eat, the mouse remem
let's bring the pot of fat
church and found the
understood the trick o
unkind cat jumped onto

Have no fear of perfection, you'l

## பாட்டும் நானே...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றுகூடி காட்டிய எதிர்ப்பை வென்றுவிட்டு, நிதானமாகப் பேசிய அவரது பேச்சு, மதிப்பிற்குரிய ஒன்று என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. புத்தியால் இயங்குபவர் என்ற ஒரு பெயரைப் பெற்றுவிட்ட ரணில், ஏதாவது கணக்குவழக்குப் பண்ணி அனைவரையும் அழைக்கிறாரா என்று தெரியவில்லை. அப்படியில்லாமல் உண்மையாக நாட்டின் நன்மை நோக்கி அழைத்திருந்தால் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- இதற்குள் ஒரு 'டீலும்' இல்லைதானே.**

**9.கேள்வி:-**

என்ன? உங்கள் நண்பர் வடக்கின் முன்னால் முதலமைச்சர் புதிய அரசில் அமைச்சராகி விடுவார் போல் இருக்கிறதே.

**பதில்:-**

அது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகவே பலராலும் கருதப்படுகிறது. நல்லவற்றைத் தரும் விதியை 'ஆகூழ்' என்றும், தீயவற்றைத் தரும் விதியைப் 'போகூழ்' என்றும் சொல்வார்கள். நீதியரசருக்கு கொஞ்சக் காலாமாய் 'ஆகூழ்' நடந்து கொண்டிருக்கிறது. பெற்ற பதவியின் கடமைகளைச் சரிவரச் செய்யாமலே அதைவிட உயர்ந்த பதவியை அடைந்து கொண்டிருக்கிறார் அவர். முதலமைச்சர் பதவியை வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார். இப்போது அந்தப் பதவியை வைத்து அமைச்சர் பதவியை பெறப்போகிறார். பிழைகள் விடுவது அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான். விட்ட பிழைகளைத் திருத்தவும் தெரிந்திருக்க வேண்டும் என முதல் கேள்வியில் சுமந்திரனுக்காகச் சொன்னதைத்தான் இவருக்கும் சொல்ல விரும்புகிறேன். மு.முதலமைச்சர் இங்காவது தன் நிர்வாகத் திறமையைக் காட்டி, தனது பழைய பழியைத் துடைக்க முயல்வாரா? காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- இது உள் வீட்டுப் பிரச்சினையுங்கோ. ஹி..ஹி..**

# Ponniyin Selvan

I (transl. Son of Ponni) is an upcoming Indian Tamil language period action drama film directed by Mani Ratnam, who co-wrote it with Elango Kumaravel and B. Jeyamohan. Produced by Ratnam and Allirajah Subaskaran under Madras Talkies and Lyca Productions, it is the first of two cinematic parts based on Kalki Krishnamurthy's 1955 novel Ponniyin Selvan. The film stars an ensemble cast of Vikram, Aishwarya Rai Bachchan, Jayam Ravi, Karthi, Trisha, Aishwarya Lekshmi, Sobhita Dhulipala, Prabhu, R. Sarathkumar, Vikram Prabhu, Jayaram, Prakash Raj, Rahman and R. Parthiban. The music is composed by A. R. Rahman, with cinematography handled by Ravi Varman, editing done by A. Sreekar Prasad and production design by Thota Tharani.

The adaptation for the novel was planned by established actors and directors from the film fraternity, ever since the novel gained popularity, but did not materialize due to several reasons. After a failed attempt by M. G. Ramachandran in late-1950s, Mani Ratnam tried to adapt the novel in the mid-1990s and early-2010s, which became unsuccessful. Stating it as his "dream project", Ratnam revived the adaptation in January 2019, with Lyca Productions being brought on board for funding the project. With several changes in the cast and crew, the film went on production in mid-December and completed within September 2021, irrespective of production being halted twice due to COVID-19 pandemic. The film was shot in various places across India, with few sequences being shot in Thailand.






Ponniyin Selvan was originally intended to be a stand-alone film but it was later split into two parts.The first part, PS-I is scheduled to be have a worldwide theatrical release on 30 September 2022.

Vikram as Aditya Karikalan, the crown prince and the commander of Northern troops in Sundara Chola's Reign. Eldest son of Sundara Chola. Arulmozhivarman and Kundavai's elder brother.

Aishwarya Rai Bachchan in a dual role as: Nandini, a Pazhuvoor queen and wife of Periya Pazhuvettaraiyar and Aditya's love interest.

Sara Arjun as Young Nandini.

Mandakini Devi, also known as Singaara Naachiyaar or Oomai Rani (transl. "The Mute Queen"), Nandini's deaf and mute mother.

Jayam Ravi as Arulmozhivarman aka Ponniyin Selvan, later known as the great king Raja Raja Cholan. Youngest son of Sundara Chola. Aditya Karikalan and Kundavai's younger brother.

Karthi as Vallavaraiyan Vandiyadevan, the brave, adventurous and sarcastic warrior prince of Vaanar Clan.

Trisha as Kundavai Pirattiyar, also known as Ilaiya Piratti, the Chola princess and daughter of Emperor Sundara Chola and Vallavaraiyan's Love interest.

Aishwarya Lekshmi as Poonguzhali, also known as Samuthirakumari (transl. "The princess of the ocean"), a boat woman living in Kodikarai.

Sobhita Dhulipala as Vaanathi, also known as Kodambalur Ilavarasi, a shy Kodumbalur princess and Arulmozhi's love interest.

Prabhu as Periya Vellar Boothi Vikramakesari, the Irunkovel chieftain, uncle of Vaanathi and the Commander of the southern troops during Sundara Chola's reign.

R. Sarathkumar as Periya Pazhuvettaraiyar, the chancellor and treasurer of the Chola kingdom from the Paluvettaraiyar clan who was respected for his valour and 64 scars he got in battles.

Vikram Prabhu as Parthibendra Pallavan, friend of Aditya Karikalan, who comes from the lineage of Pallavas.

Jayaram as Azhwarkadiyan Nambi alias Thirumalaiappan, a Veera Vaishnavite spy who works for the Prime Minister and Sembiyan Mahadevi.

Prakash Raj as Sundara Chola alias Parantaka Chola II, the emperor of Chola empire, father of Aditya Karikalan, Kundavai and Arulmozhivarman, also known for his beauty giving him the name Sundara.

Rahman as Madurantaka Uttama Chola, the son of Sembiyan Mahadevi who was raised as a Shaivite.

R. Parthiban as Chinna Pazhuvettaraiyar, the chief in-charge of Thanjavur fort.

Ashwin Kakumanu as Senthan Amudhan, a flower seller.

Aswin Rao as Kandhamaaran, also known as Illaiya Sambuvaraiyan, the prince of Kadamboor.

Nizhalgal Ravi as Kadmabur Sambuvaraiyar, the petty ruler of Kadamboor from the Sambuvaraya family.

Lal as Tirukoilur Malaiyaman alias Milaadudaiyar, the father-in-law of Sundara Chola and maternal grandfather for his children.

Vijaykumar as Vijayalaya Chola.

Vidya Subramanian as Vanavan Mahadevi, the Empress of the Chola empire.

Jayachitra as Sembiyan Mahadevi aka Periya Piratti, the wife of Gandaraditya and mother of Utthama Chola.

Nassar as Veerapandiyan

Kishore as Ravi Dasan, antagonist of the novel Ponniyin Selvan.


Riyaz Khan as Soman Sambhavan one of the member of Pandya Aabathudavigal.

Vinay Kumar as Parameswaran or Theveraalan one of the member of Pandya Aabathudavigal.

Mohan Raman as Kudanthai Jothidar, the astrologer in the town of Kudanthai (present-day Kumbakonam).

**(See page 10)**

# Ponniyin Selvan



Vinodhini Vaidyanathan as Vasuki, maid of Nandini.

Master Raghavan as Pandya prince.

Arjun Chidambaram as Pinagapaani.

Babu Antony as Rashtrakuta king.

Makarand Deshpande as Chief Kaalamugar.

Aadesh Bala as troop commander of Periya Pazhuvettaraiyar.

Balaji Sakthivel

Vijay Yesudas

Amzath Khan

Origin

In 1958, M. G. Ramachandran announced Ponniyin Selvan, a film adaptation of Kalki Krishnamurthy's historical novel of the same name. Ramachandran bought the film rights to the novel for ₹10,000 (equivalent to ₹810,000 or US$11,000 in 2020), and would produce, direct and star in the adaptation, which would feature an ensemble cast including Vyjayanthimala, Gemini Ganesan, Padmini, Savitri, B. Saroja Devi, M. N. Rajam, T. S. Balaiah, M. N. Nambiar, O. A. K. Thevar and V. Nagaiah. Before shooting could begin, Ramachandran met with an accident, and the wound took six months to heal; Ramachandran was unable to continue with the film even after renewing the rights four years later.

In a January 1994 interview with Filmfare, Mani Ratnam stated that adapting the novel was one of his "dream projects" that he had hoped to work on during his career. Ratnam revealed that he worked on a first draft of the film alongside actor-director Kamal Haasan, who had bought the rights of the novel, but the pair shelved their plan as the project did not make financial sense at the time.

In late 2010, Ratnam renewed his interest in the project and worked alongside writer Jeyamohan to finalise the script for the film adaptation of Ponniyin Selvan. Expected to be made in the Tamil at a cost of ₹100 crores, Ratnam planned to produce the film himself initially, with the intention of teaming up with a bigger production house later on in the film-making process.[35] Technicians including composer A. R. Rahman, cinematographer Santosh Sivan, editor A. Sreekar Prasad and art director Sabu Cyril were soon after attached to the project.

Ratnam cast Vijay in the leading role of Vallavaraiyan Vandiyadevan. After signing the film, Vijay called it a "privilege" and a "dream come true" to be working with Ratnam for the second time after Nerrukku Ner (1997). Mahesh Babu was cast as Arulmozhi Varman, who later becomes the Chola emperor Rajaraja I in the project, and also expressed his delight at being selected by Ratnam. Arya also joined the project to play a third leading male role after the script was narrated to him. Meanwhile, Sathyaraj was signed to play a supporting role in the film. During the course of the casting process, Ratnam had also considered other actors including Vikram, Suriya and Vishal but they eventually did not make the final cast. For the leading female roles, after considering Jyothika, the team finalised Anushka Shetty for a role and held discussions with Priyanka Chopra in regard to other characters.

Seven days before the scheduled start of the shoot, a photoshoot for the film was held in Chennai featuring Vijay and Mahesh Babu. For the shoot, the team sought permission from the officials of Mysore Palace and Lalitha Mahal to film sequences. However, their requests were denied with palace officials keen to keep film crews away from the historic locations. The film was later shelved before the start of the filming stage, as the expected cost of production escalated. Jeyamohan stated that the film did not materialise as the team struggled to find available locations to shoot the film. He revealed that temple officials in Tamil Nadu refused to allow the team to film scenes on the premises and that the expensive cost of producing replica sets meant that it would not be a viable solution.



The film score and soundtrack were composed by Mani Ratnam's norm composer A. R. Rahman. Rahman eventually stated that Ponniyin Selvan is one of the most difficult projects, since it is an epic film, and required an exhaustive research. He further stated that it took him six months to work on the project, and Rahman and Mani Ratnam also went to Bali to write some of the songs. However, the challenging part was to create a particular sound that Ratnam was looking for. In an interaction with an online news portal, Rahman stated that "He (Ratnam) wanted a particular sound, which is unique but at the same time relatable and we had to work really hard to get the sound" Rahman researched on periodic instruments for the soundtrack in tune to the film's setting in Chola period.

In a September 2019 interaction with the press, Ratnam confirmed his association, with Rahman and Vairamuthu, and he further stated that the film will have 12 songs (featuring in two-parts), all of them written by the latter.[160] However, their inclusion received flak from the industry, following allegations of sexual misconduct against Vairamuthu, and the team removed him out of the project, following the backlash. Rahman did not comment about Vairamuthu's exit, since the decision was made by the officials of Mani Ratnam's production house.

Rahman told that two of the songs were written by Kabilan. In an online interaction, Mani Ratnam announced that Venba Geethaiyan wrote one song for the film, who was also present during the conversation. In August 2021, the production executives officially revealed that poet Ilango Krishnan will pen down eight songs for the film. Singer Harini confirmed in an interview that she has rendered her voice for one of the songs in the film. Shreya Ghoshal also recorded one song for the film. Rahman finished completing work on all the songs in the film, during the COVID-19 lockdown in India. Apart from composition, he also sang for the titular track in the film. In December 2021, Rahman shared a glimpse from the recording session of the film's songs, through social media platforms.

Rahman completed recording the film's songs by early-January 2022, and had submitted to Ratnam, who was impressed with the songs.In March 2022, Rahman composed the film score at the newly constructed Firdaus Studio in Dubai, and invited Ratnam to supervise the scoring in person. The following month, vocal sessions for the film score began at the Panchathan Record Inn studio in Chennai. Percussionist Sivamani confirmed his involvement on scoring the film in late-June, and shared few behind-the-scenes of the recording through Instagram.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# சுவாமி விபுலானந்தர்



முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படும் சுவாமி விபுலானந்தர் தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் முக்கியமானவர்.

தமிழையே மூச்சென்று சுவாசித்தார். இவர் ஆற்றிய தமிழ் பணிகளும் சமூக சேவைகளும் இவரை உயர் நிலைக்கு இட்டு சென்றது. ஆசிரியராக, தமிழ் பண்டிதராக, விஞ்ஞான பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப்பாளராக வாழ்ந்து தமிழுக்கும் சமூகத்துக்கும் பெரும் தொண்டாற்றினார்.

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காரைதீவு எனும் ஊரில் 1892 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 27 ஆம் திகதி இவர் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி தாயின் பெயர் கண்ணம்மா ஆவார்.

இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். ஆரம்பக் கல்வியை கல்முனை மெதடிஸ் கல்லூரியில் கற்றார். மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியல் பின்பு ஆசிரியராகவும் பணியாற்றினார்.

1912 இல் கொழும்பு தொழில்நுட்ப கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று 1916 இல் அறிவியலில் பட்டம் பெற்றார்.

இவர் ஒரு தமிழ் ஆசிரியராக மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரியில் தனது கல்விப்பணியை துவங்கினார். பின்பு கொழும்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

மதுரை தமிழ் சங்கம் நடாத்திய தேர்வில் சித்தி பெற்று பண்டிதர் பட்டம் பெற்றார். இலங்கையில் இருந்து இந்த பட்டத்தை பெற்றுக்கொண்ட முதல் நபர் இவராவார்.

யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளினுடைய பழக்கம் துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்தர் ஆக்கியது. இவர் துறவு பூண்டாலும் மக்களை விட்டு விலகவில்லை. சமூகத்தில் நிகழ்ந்த துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் பங்கெடுத்தவராவார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலானந்தர் எனும் குரு பட்டத்தை இராமகிருஷ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். பிரபோத சைதன்யர் என்ற பெயரையும் பெற்றார்.

அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி கலாச்சாரத்தில் இருந்த வீழ்ச்சியில் இருந்த தமிழ் சமூகத்தை இவர் தட்டி எழுப்பினார்.

அறிவியல் கல்வியானது தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் இருந்தது. இவர் அறிவியல் கலை சொல்லாக்கத்துக்காக உழைத்திருக்கின்றார். யாழ்நூல் என்று மிகச்சிறந்த இலக்கியத்தை இவர் படைத்திருக்கிறார்.

இது பழந்தமிழரின் இசைக்கருவியான யாழ் பற்றி சிறந்த ஆராய்ச்சி நூலாக போற்றப்படுகின்றது. 14 ஆண்டு ஆராய்ச்சியின் பலனாக இந்த நூல் கிடைத்தது.

தமிழ்சங்கம் வெளியிட்ட செந்தமிழ் எனும் இலக்கியத்தில் பல கட்டுரைகளை இவர் எழுதி இருந்தார்.

இவர் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தெளிவாக கற்று அவற்றின் பெருமைகளை மக்களுக்கும் புரியும் படியாக தனது நூல்களிலும் கட்டுரைகளிலும் இவர் எழுதி இருந்தார்.

மகாகவி பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் அவரை முதன்மைப்படுத்தி தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

தாழ்த்தப்பட்ட மக்களும் மேன்மையடைய வேண்டுமென்று விரும்பினார். நவீன மனிதனுக்கு தேவையான பழங்கால சிந்தனைகள் என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் புகழ் வாய்ந்தவையாக உள்ளன.

முத்தமிழை முதன்மைப்படுத்தி இவர் எழுதிய நூல்களும் ஆய்வுகளும் பெரும் புகழ் உடையனவாக காணப்படுகின்றன.

இவ்வாறு மிகச்சிறந்த தமிழ்ப்பணிகளை ஆற்றி தமிழையே பெருமைப்படுத்திய விபுலானந்தர் அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி உடல்நல குறைவினால் உயிர் இழந்தார்.

இறக்க முன்னரே தான் கனவு போலவே மிகச்சிறந்த தமிழ் பணிகளை இவர் ஆற்றி சென்றிருக்கின்றார்.

இவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும் ஈழத்தில் பிறந்து ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பெரிய என்றால் மிகையல்ல.



## விண்வெளி பற்றிய தகவல்கள்

நாகரிகத்தின் வளர்ச்சியின் நிலை இருந்தபோதிலும், நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி மனிதகுலம் இன்னும் மிகக் குறைவாகவே அறிந்திருக்கிறது. இருப்பினும், நாம் அறிந்த சில உண்மைகள் ஆச்சரியமானவை மற்றும் கணிக்க முடியாதவை.

### இலேசான தன்மை

சனியை தண்ணீரில் போட்டால் அது மேற்பரப்பில் மிதக்கும். சனியின் பொருளின் சராசரி அடர்த்தி நீரின் அடர்த்தியை விட கிட்டத்தட்ட 2 மடங்கு குறைவு. பொருத்தமான கண்ணாடியை நீங்கள் கண்டுபிடிக்க முடிந்தால் (குறைந்தது 60 ஆயிரம் கி.மீ. விட்டம் கொண்டது) அதை நீங்களே சரிபார்க்கலாம்

### நிலையான இயக்கம்

நாம் அனைவரும் - மக்கள், வீடுகள், ஆறுகள் மற்றும் மலைகள் - தொடர்ந்து வினாடிக்கு 530 கிலோ மீற்றர் வேகத்தில் விண்வெளியில் நகர்கிறோம். நமது விண்மீன் மண்டலத்தின் உள்ளே, நாம் 225 கி.மீ. வேகத்தில் நகர்கிறோம், அதே சமயம் கேலக்ஸியே 305 கி.மீ. வேகத்தில் விண்வெளியில் விரைகிறது. இப்படி நீங்கள் இந்த வாக்கியத்தை படித்துக் கொண்டிருக்கும் போதே பூமி உங்களை 3 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்திற்கு மாற்றிவிட்டது.

சந்திரன் பூமியை விட்டு நகர்கிறது. ஒவ்வொரு ஆண்டும், சந்திரன் பூமியிலிருந்து கிட்டத்தட்ட 4 செ.மீ. தொலைவில் நகர்கிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன, அவற்றில் ஒன்று பூமியின் சுழற்சிக் காலம் ஒரு நாளைக்கு 2 மில்லி விநாடிகள் குறைவது. சந்திரன் எவ்வாறு உருவானது என்று விஞ்ஞானிகளுக்குத் தெரியாது, இது பூமியின் ஒரு பகுதி என்று அவர்கள் பரிந்துரைக்கின்றனர், பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் மேற்பரப்பைத் தாக்கிய ஒரு பெரிய அண்ட உடலால் அடிக்கப்பட்டது.

### கடந்த காலத்திலிருந்து வெளிச்சம்

நீங்கள் பார்க்கும் சூரிய ஒளி 30,000 ஆண்டுகள் பழமையானது. சூரியனிடமிருந்து நாம் பெறும் ஆற்றல் 30,000 ஆண்டுகளுக்கு முன்பு அதன் மையத்தில் உருவாக்கப்பட்டது. அதாவது போட்டான்கள் (ஒளி துகள்கள்) நட்சத்திரத்தின் மையத்திலிருந்து அதன் மேற்பரப்புக்கு உடைக்க எவ்வளவு நேரம் ஆகும். அதன் பிறகு, வெறும் 8 நிமிடங்களில் பூமியை வந்தடையும். சூரிய மையத்தின் வெப்பநிலை 13 மில்லியன் டிகிரிக்கு மேல் உள்ளது, மேலும் அதன் மூலம் உருவாக்கப்படும் அனைத்து ஆற்றலும் முதலில் மற்ற கதிர்வீச்சுகளின் ஒளி வடிவில் மேற்பரப்புக்கு ஏராளமான அடுக்குகள் வழியாக செல்ல வேண்டும்.

# கல்விக்கதிர்

- அகரன் -

## அறிய வேண்டியவை



* கிளைடர் விமானம் 1853இல் உருவாக்கப்பட்டது.
* வில்வித்தை கலையில் முதலிடம் வகிப்பவர்கள் கொரியர்கள்.
* நினைவு தபால்தலைகளை முதன்முதலில் வெளியிட்ட நாடு அமெரிக்கா.
* முதன்முதலில் மக்களுக்காக நூலகம் அமைத்தவர் ஜூலியஸ் சீஸர்.
* பைபிளை முதன்முதலில் தமிழில் அச்சிட்டவர் சீகன் பால்க்.
* கடலில் சுறா தோன்றி 40 கோடி ஆண்டுகள் ஆகின்றன.
* சுறா மீனில் 350 இனங்கள் உள்ளன.
* சுறா மீனுக்குப் புற்றுநோய் வருவதில்லை.
* எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டாலும் சுறா மீனுக்கு சீழ் பிடிப்பதில்லை.
* கறுப்பு ஆடை அணிந்து குளிப்பவர்களை சுறாமீன் தாக்குவதில்லை.
* நாய்களுக்கு என்று ஐரோப்பாவில் ரத்தவங்கி உள்ளது.
* கழுதைகள் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் தான் தூங்குமாம்.
* தவளையின் ரத்த நிறம் கறுப்பாக இருக்கும்.
* கிரேக்க மேதையான சோக்ரடீசுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.
* தென்னை மரம் 100 ஆண்டு காலம் ஆயுள் என்றாலும், 80 ஆண்டுகளுக்கு மேல் பலன் தராது.
* தென்னை உஷ்ண மண்டல பயிர். அதனால் குளிர் பிரதேசங்களில் விளையாது.
* இலங்கை, மலேசியா, சுமத்திரா (இந்தோனேஷியா), கிழக்கிந்திய தீவுகள் ஆகிய பகுதிகளில் தென்னை மரம் அதிகளவில் வளர்க்கப்படுகிறது.
* கிட்னி சம்பந்தமான நோய்களையும், மஞ்சள் காமாலையையும் தடுக்க வல்லது இளநீர்.
* அந்தமான் நிக்கோபார் தீவில் தென்னை முக்கியப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது.
* நைல் நதியின் நீளம் 6,650 கிலோ மீற்றர்.
* மெரீனா கடற்கரையின் நீளம் 13 கிலோ மீற்றர்.
* சுதந்திர தேவி சிலையின் உயரம் 46 மீற்றர்.
* இந்தியாவின் முதல் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா.
* விண்வெளிக்கு சென்ற முதல் வீரர் யூரி ககாரின். இவர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்.
* இந்தியாவின் முதல் செயற்கைக்கோளின் பெயர் ஆர்யபட்டா.
* முன்னும் பின்னும் பறக்கும் சக்தி படைத்த பறவை ஊங்காரக் குருவி.
* உலகில் முதன்முதலாக வீட்டு விலங்காக கருதப்பட்டது நாய்.
* நத்தைகள் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வரை தூங்கும் தன்மை கொண்டது.
* இந்தியாவின் முதல் பெண் கவர்னர் சரோஜினி நாயுடு.
* மனிதனின் தும்மல் மணிக்கு 150 கி.மீற்றர் வேகம் கொண்டது.
* 1987 மே 30ஆம் திகதி கோவா மாநில அந்தஸ்து பெற்றது.
* சீன மொழியில் மொத்தம் 1,500 எழுத்துகள் உள்ளன.
* விக்டோரியா ராணிக்கு முடிசூட்டும் போது அவருக்கு 13 வயதுதான்.
* திமிங்கலத்தின் மூளை எடை 10 கிலோ.
* யானையின் மூளையின் எடை 6 கிலோ.
* தேவாங்கு சாப்பிடும் பொருளை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்த பின்னர்தான் சாப்பிடும்.
* குழி முயல் நீர்ச்சத்து நிறைந்த புல், முட்டைக்கோஸ், கரட், முள்ளங்கிக் கீரை ஆகியவற்றை சாப்பிடுவதால் தண்ணீரே அருந்துவதில்லை.
* அப்பிளில் அடங்கியுள்ள அமிலம் மாலிக் அமிலம்.
* ரப்பரை பதப்படுத்த உதவும் அமிலம் போர்மிக் அமிலம்.
* எலுமிச்சை, ஒரேஞ்சு போன்றவற்றில் அடங்கியுள்ள அமிலம் சிற்றிக் அமிலம்.
* வினாகிரியில் அடங்கியிருக்கும் அமிலம் அசற்றிக் அமிலம்.
* ஸ்ட்ராபெர்ரி, நெல்லிக்காய் போன்றவற்றில் உள்ள அமிலம் அல்கோர்பிக் அமிலம்.
* திராட்சை, புளி போன்றவற்றில் அடங்கியுள்ள அமிலம் டார்டாரிக் அமிலம்.



காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# கம்பு சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



கம்பில் கரையாத நார்ச்சத்து நிறைந்துள்ளது, இது செரிமானத்திற்கு உதவுகிறது. உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் தினசரி ஒரு வேளை கம்பு உள்ள உணவை எடுத்துக்கொள்வது சிறந்த பலனளிக்கும்.

கம்பில் பைட்டோ அமிலம் உள்ளது, கொழுப்பு வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கக்கூடிய,பைடிக் அமிலம் உடலில் உள்ள கொழுப்பின் அளவையும் உறுதிப்படுத்துகிறது. இதன்மூலம் கெட்ட கொழுப்பை கரைக்க முடியும்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் கம்பு மிகவும் சக்தி வாய்ந்தது. அதிக நார்ச்சத்து இருப்பதால், மற்ற உணவுகளுடன் ஒப்பிடும்போது இது மெதுவாக செரிப்பதால், குளுக்கோஸை மெதுவான விகிதத்தில் வெளியிடுகிறது.

கம்பு உணவை வழக்கமாக உட்கொள்ளும் பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலகட்டத்தில் வரக்கூடிய மார்பகப்புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் உருவாகாமல் பாதுகாக்கிறது என நிரூபிக்கப்பட்டுள்ளது. உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும். உடலைநோய்தாக்காமல்பாதுகாத்துகொள்ளும்.

கம்பங்கூழ், கம்பம் புட்டு, கம்பம் ரொட்டி, கம்பம் தோசை, கம்பு அடை என பலவிதமான கம்பு மூலம் செய்யப்படும். கம்பு நம் உடலுக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. மற்ற சிறு தானியங்களைப் போலவே, நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கக்கூடியது.

கம்பு நார்ச்சத்து மிகுந்த உணவாகும். இதில் கொழுப்பு குறைவான அளவே உள்ளது. கம்பை கூழாக குடித்து வரும்போது உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புகள் கரைந்து உடல் எடை குறையும்.

## கம்பு புட்டு

தேவையான பொருள்கள்
கம்பு - ஒரு கப்
கொள்ளு - கால் கப்
வேர்க்கொம்பு (சுக்கு) - 2

கம்பு மற்றும் கொள்ளை வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

வறுத்தவற்றுடன் சுக்கு சேர்த்து கொரகொரப்பாக பொடித்துக் கொள்ளவும்.

பொடித்து வைத்திருக்கும் மாவுடன் உப்பு சேர்த்த தண்ணீர் தெளித்து பிசையவும். பிடித்தால் உருண்டையாகவும், உடைத்தால் உடையும் பதம் வரும் வரை பிசையவும் புட்டு குழலில் மாவை வைத்து ஆவியில் வேக வைக்கவும்.வெந்ததும் எடுக்கவும். சுவையான கம்பு புட்டு தயார்.கம்பு என்பதால் தண்ணீரின் அளவு அதிகமாக தேவைப்படும். தண்ணீர் தெளித்து பிசறி பத்து நிமிடம் அப்படியே வைக்கவும். காய்ந்து போனால் மீண்டும் தண்ணீர் தெளித்து பிசறி வேக வைக்கவும்.






பயறு மாவு – ஒரு கப்
அரிசி மாவு – அரை கப்
மிளகாய் தூள் – 1 1/2 தேக்கரண்டி
பெருங்காயத் தூள் – கால் தேக்கரண்டி
சோடா உப்பு – ஒரு சிட்டிகை
எள்ளு – ஒரு தேக்கரண்டி
உப்பு – அரை தேக்கரண்டி
கறிவேப்பிலை – ஒரு கொத்து
ஊற வைத்த உளுந்தப்பருப்பு – 5 கரண்டி

ஒரு பாத்திரத்தில் மைதா மாவுடன், அரிசி மாவு, சோடா உப்பு, பெருங்காயத் தூள், மிளகாய்த் தூள், உப்பு, ஊற வைத்த பருப்பு சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி மிருதுவாகும் வரை பிசையவும். அதில் ஒரு மேசைக் கரண்டி எண்ணெய் ஊற்றி மேலும் சிறிது நேரம் பிசையவும்.

பின்னர் கறிவேப்பிலையை பொடியாக நறுக்கி சேர்த்து பிசைந்து விடவும். கடைசியாக எள்ளு மற்றும் எண்ணெய் சேர்த்து பிசையவும். பிசைந்த மாவை அரை மணி நேரம் ஊற வைக்கவும்.

ஊற வைத்த மாவை சிறு உருண்டைகளாக பிரித்து உருட்டி வைக்கவும். பின்னர் ஒரு உருண்டையை எடுத்து பயருமாவில் தோய்த்து எடுத்து சப்பாத்தி கட்டையால் மெல்லியதாக தேய்க்கவும்.

இதே போல் மீதமுள்ள உருண்டைகளையும் மெல்லியதாக தேய்த்து வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் செய்து வைத்திருக்கும் தட்டையை போட்டு இரண்டு பக்கமும் திருப்பி விட்டு எண்ணெயின் சலசலப்பு அடங்கியதும் எடுக்கவும். மொறுமொறுப்பான தட்டை வடை அல்லது பருத்தித்துறை வடை தயார்

## உருளைக்கிழங்கு சமோசா

தேவையான பொருள்கள்

கோதுமை மாவு – 200 கிராம்
வேக வைத்த உருளைக்கிழங்கு – 2
வெங்காயம் – 2
சீரகம் – ஒரு தேக்கரண்டி
மிளகாய்த் தூள் – தேவைக்கேற்ப
எண்ணெய் – தேவையான அளவு
உப்பு – தேவையான அளவு

வேக வைத்த உருளைக்கிழங்கை தோல் நீக்கி பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் விட்டு சீரகம் தாளித்து, வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு உருளைக்கிழங்கைச் சேர்த்து மிளகாய்த் தூள் மற்றும் உப்பு சேர்த்து வதக்கி மசாலாவைத் தயார் செய்து வைக்கவும்.

கோதுமை மாவில் உப்பு சேர்த்து, தண்ணீர் விட்டு பிசைந்து, சப்பாத்திக்கு திரட்டுவது போல் திரட்டி அரை வட்டங்களாக வெட்டிக் கொள்ளவும்.

வெட்டிய துண்டில் ஒன்றை எடுத்து, அதன் ஒரு பாதி விளிம்பில் தண்ணீர் தொட்டுக் கொண்டு, மறுபாதி விளிம்பின் மேல் வைத்து ஒட்டி கூம்பு போல் செய்து கொள்ளவும்.

அதனுள்ளே தயாரித்த உருளைக் கிழங்கு மசாலாவை வைக்கவும்.

பிறகு ஓரங்களில் தண்ணீர் தடவி ஒட்டிக் கொள்ளவும்.

இதே போல் மீதமுள்ள மாவிலும் மசாலாவை வைத்து தண்ணீர் தொட்டு ஒட்டி, சூடான எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும்.

சுவையான உருளைக்கிழங்கு சமோசா தயார்.



# மழைப் பா



நீல வானம் அழுதது நிறைய மழை பொழிந்தது
நீரை அள்ளிப் பருகுவோம் தூய்மையாக வாழ்வோம்
நதியும் கடலில் சேருது ஆறுகளும் நிறைந்தது
நல்ல நீரை சேமிப்போம் சிக்கனமாய் பாவிப்போம்

மண்ணில் மரங்கள் வளர்ந்திட காடுகளும் செழித்திடும்
மழையை நமக்குத் தந்திடும் அழிந்திடாது காப்போமே
சின்னஞ்சிறிய துளிகள்தான் வெள்ளமாக மாறுது
சிதறும் மணியை போலவே முற்றத்திலே பரவுது

கருகி நின்ற புற்களும் கலப்பையோடு உழவனும்
கால மழையை வேண்டியே ஏக்கத்துடன் தவித்தனர்
கருமை மேகம் சூழ்ந்தது சடுதியாக இடித்தது
கண்ணில் மின்னல் வெட்டியே கடுமையாகப் பெய்தது

பயிர்கள் நாளும் வளர்ந்திட பஞ்சமெலாம் பறந்திடும்
பாய்ந்து குதித்து மகிழ்ந்திட நெஞ்சமெல்லாம் ஏங்குது
பருவ காற்று வீசினால் பக்குவமாய் பொழியுமே
பாலர் எம்மை நனைத்திடும் செல்லமான மழையுமே

**தெ.கரிதரன் (சம்பூர் சமரன்)**

## முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்



முத்தமிழ் வளர்த்த நற்றமிழ் அறிஞர்
வத்திரக்காவி தரித்தோன் ஈழமண் பெற்றெடுத்த
வித்தகர் அவதரித்தார் மீன்பாடும் தேனாட்டில்
புத்தொளி பெற்று விளங்கியது கிழக்கிலங்கை


காரைதீவுக் கண்ணகை அம்மன் குழந்தையாய்
சேரன் தந்த செந்தமிழாய்ந்து தொண்டாற்றி
பாரம்பரிய பைந்தமிழ் இசையை தமிழர்க்கு
ஆரத்தந்த அரும்பெரும் வித்தகத் துறவியிவர்

உலகின் முதல் தமிழ்ப் பேராசானாய்
தலமெனும் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராய்
இலக்கியம் வளர்த்த ஆளுமைமிகு அதிபராய்
புலமைகொள் நல்லறிஞராய் திகழ்ந்தவர் மயில்வாகனனார்

சங்கத்தில் தமிழ் வளர்த்த புலவருண்டு
பொங்கு தமிழில் காவியங்கள் படைத்தவருண்டு
இங்கிதமாய் இசைத்துறையை வளர்த்தவருண்டு – ஆயினும்
அங்கமெலாம் தமிழார்வம் கொண்டமைந்தவர் விபுலானந்தரே

**சம்பூரணி - மூதூர்**

# கலைக் கதிர்



# கம்பன் சொன்ன கதை

## இலக்கிய நயம்



கம்பன் கவிகளை எழுதுவதற்கு முன்னர் அதனை ரசிக்கின்றான், அவன் ரசித்ததை தான் மட்டும் அனுபவித்து அதனுள் கரைந்து விடாமல், படிக்கும் வாசகனையும் தன் கவிகளின் உள்ளே இழுத்துச் சென்று தன் வார்த்தைகளில் அழுத்தத்திலும், அதன் ஓசை நயத்திலும் மூழ்கடிக்கச் செய்துள்ளான் இது அசாத்தியமானதோர் ஆற்றல்.

இராம காப்பியத்தில் ஓர் தனித்துவம் உண்டு. அதாவது கம்பன் தன் காதைக்குள் கொண்டு வரும் பாத்திரங்களை வர்ணிப்பது. இராமனின் மகத்துவத்தைக் கூறும் கம்பன் அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில் இராவணனையும் வர்ணிக்கின்றான்.

இராமனை கண்டு வியந்து நிற்கும் போது அப்படியே சென்று இராவணனின் கம்பீரத்தையும், வீரத்தையும் கூறும் போது கம்பன் வாசகனை வியப்பின் உச்சத்திற்கே கொண்டு செல்கின்றார். கதாபாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு அந்தந்த பாத்திரங்களை எடுத்துக் கூறுவதில் கம்பனுக்கு நிகர் அவன் மட்டும் என்றே தோன்றியது.

உதாரணமாக – இராமனையும், தம்பி இலட்சுமணரையும் விசுவாமித்திர முனி தன்னுடைய வேள்வியைக் காக்க கானகம் அழைத்துக் கொண்டு செல்கின்றார். இந்த கதை கானகத்தில் நகர்ந்து கொண்டு செல்லும் போது தாடகை எனும் ஓர் அரக்கியின் பாத்திரம் உள்ளே பிரவேசிக்கின்றது.

அவளை கம்பர் இவ்விதமாக என் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார்.

**இறைக்கடை துடித்த புருவங்கள் – எயிறு என்னும்**
**பிறைக்கிடை பிறக்கிட மடித்த பிலவாயள்**
**மறக்கடை அரக்கி – வடவைக்கனல் இரண்டாய்**
**விறைக்கடல் முளைத்தென வெறுப்பு எழ விழித்தாள்**

கம்பனின் இவ்வரிகள் எத்தனை அழகாக ஓர் அரக்கியை காட்டுகின்றது அடடா… கம்பன் கவியுலகில் ஜாம்பவான் தான் என்றுமே. கடும் கோபம் காரணமாக நெறித்த புருவங்கள்.., கோரமான பற்கள் தெரிய, இரு கண்களும் தீ என எரிய, ஏழுலகமும் கேட்டு அதிரும் படி கர்ச்சினை செய்கின்றாள் இராமனை கண்ட அரக்கி. இங்கு ஓர் சிறிய பாத்திரமாக கதைக்குள் வரும் தடாகையைக் கூட கம்பன் இவ்விதமாக கூறுவது வியப்பினை ஏற்படுத்துகின்றது அல்லவா. ஒவ்வோர் பாத்திரத்தினையும் வாசகனின் கண்முன்னே நிறுத்த வேண்டும் என்ற கம்பனின் நோக்கத்தையும், அவன் கவியாற்றலையும் கூட இக்கட்டம் வெளிப்படுத்துகின்றது.

கம்பன் இங்கு தாடகைக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் உண்டு என்பதும் தொடர்ந்து படித்த போதே தெளிவானது.

இராமன் ஓர் தெய்வீகப் பிறவி, தன்னிகரற்ற தலைவன் அவன் மோதும் ஓர் அரக்கியை சாதாரணமானவளாக வர்ணித்து விட முடியுமா? இப்படிப்பட்ட அரக்கியை நோக்கி இராமன் விட்ட பாணம் சொல்லொக்கும் கடிய வேகச்சுடு சரம் எனச் சென்று தாடகையை தாக்குவதாக கம்பன் கூறுகின்றான்.

உதிர்க்கப்படும் சொல்லுச்சொல் எத்தனை வேகம் உண்டோ அத்தனை வேகமாக பயணித்த இராமனின் அம்பு கல் ஒக்கும் அவள் நெஞ்சில் புகுந்து புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் போல துளைத்து வெளிவந்ததாக கம்பன் விவரிக்கின்றான்.

வலிமை படைத்த அரக்கியின் நெஞ்சை, சொற்கள் உதிரும் வேகத்தொடு சென்று தாக்கிய இராமனின் அம்பு. தீயவர்களின் காதில் நல்லோர் ஓதும் சொற்களைப் போல் இலகுவாக வெளிவந்தது என்று கூறும் கம்பனின் கவி நயம்.

இக்கணம் ஒன்று – பெருமாளின் அழகை வர்ணித்து பாடிய ஆழ்வார் ஓர் கட்டத்தில் அதற்கு மேலே பெருமாளின் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லாமல் ஐயோ எனச் சொல்லி அவனழகை வர்ணிப்பேன் என்று வியந்தே நின்று விட்டாராம். அதபோல கம்பனின் கவிச்சிறப்பை அவன் கையாண்ட கவி நுணுக்கங்களை கண்டு வியக்க மட்டுமே முடியும் அதனை வர்ணிக்க எடுத்துக்கூற தெரியவில்லை.

முழு உலகத்தினையும் இரு வரிக்குள் அடக்கலாம் என்ற உண்மையை வெளிப்படுத்தியவன் வள்ளுவன். காவியத்திற்குள் கற்பனையை உலாவவிட்டு இசையோடு கூடிய நாடகத்தினையும் இணைத்து ஒப்பற்ற காவியத்தை படைத்தான் இளங்கோ.

இந்த இருவரிலும் முற்றாக வேறுபட்டு இலக்கிய உலகில் உள்ள நுணுக்கங்கள் அனைத்தையும் நால் வரிக் கவியில் உள்ளடக்கி இப்படியும் எழுதலாம் என்ற உண்மையை உணரவைத்து தான் பெற்ற கவியின்பம், இலக்கிய இன்பம் வையகமும் பெற வேண்டும் என்று பல நூறு வருடங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் வாழ்த்த ஒருவன் இன்று உயரத்தின் தாரகையாக ஜொலிக்கின்றான்.

இன்றும் ஓர் முரண்பட்ட கருத்து உண்டு அதாவது கம்பன் என்ன சொந்தமாகவா காவியம் படைத்தான் வான்மீகி எழுதியதை அப்படியே மொழி பெயர்த்தான். இதில் எப்படி அவனை சிறப்பாக எடுத்துக் கொள்ள முடியும் என்பதே அது.

அனால் கம்பன் எழுதிய கவிக் காப்பியத்தை படிக்கும் போது பல இடங்களில் வான்மீகியையும் விஞ்சி விடுகின்றான். வான்மீகியின் கதையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது கம்ப காப்பியம் என்பதே உண்மை.

கம்பனவன் கவிகளின் ஊடாக ஓர் தீர்க்கதரிசியாக உருவெடுக்கின்றான். இயல்பு வாழ்வினை அழகாக படம் பிடிக்கின்றான். தத்துவம் கலந்த கவிபுகுத்தி சித்தாந்தகளையும் விவரித்து அறம், பொருள்,இன்பம்,வீடு என அனைத்தையும் தெளிவாக காட்டுவதால் தான் அவன் இன்றும் சிகரத்தின் உச்சத்தில் உள்ள ஓர் உலகமகாகவியாக வாழ்கின்றான் என்ற வாதத்தினை எவராலும் மறுக்க முடியாது.

இந்தப் பிரபஞ்சத்தை நாம் அண்ணார்ந்து பார்க்கையில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் அழகை வாரி இறைக்கும், ஆனாலும் எம் உலகில் மானிடக் கண்களுக்கு ஆதவனும், நிலவும் தனியோர் அழகு. அவ்வகையாக கம்பனும் இலக்கிய தமிழ் உலகில் தனித்துவத்தை பெற்ற ஓர் படைப்பாளி என்பதனை அவன் படைத்த காப்புகளை படிப்பவர்களுக்கு நிதர்சனமாகும்.

இராமனின் தெய்வீகமும், இலக்குவனனின் அன்பும், சகோதரங்களின் பாசமும், அன்னைகளின் நேசமும், பெண்மையின் உயர்வும், சீதையின் கற்பும், வாலியின் வீரமும், அனுமனின் பக்தியும், இராவணின் ஒழுக்கமும், சூர்ப்பநகையில் நயவஞ்சகமும், மாயனின் மாயாஜாலங்களும், தசரதனின்ஆட்சியும் என ஒவ்வோர் பாத்திரத்தையும் தனிப்பண்போடு உலகிற்கான எடுத்துக்காட்டாய் எடுத்தியம்பிய கம்பனின் சிறப்பு தனிச்சிறப்பு.



ஆக்கம்: ம.விஜிதா,
மாணவி NVQ தரம் 6
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்.

# பன்றி வளர்ப்பு

வடக்கு மாகாணத்தில் பன்றிவளர்ப்பு மிக வேகமாக முன்னேறி வரும் தொழிலாகும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பன்றி வளர்ப்பு முறையே இங்கு பெரும்பாலும் காணப்படுகிறது. பன்றிகளை எந்த விதமான சூழ்நிலையிலும் வளர்க்க முடியும். பன்றிகள் மிக வேகமாக வளர்வதோடு சிறப்பான உணவு மாற்றுத்திறனையும் கொண்டவை.

### கழிவுகளை காசாக்கும் இயந்திரம் பன்றி

எமது சூழலில் கிடைக்கும் உணவுக் கழிவுகள் மற்றும் இலை குழைகளை உணவாக அளிப்பதன் மூலம் பன்றிகளின் உடல் நிறையை அதிகரித்துக் கொள்ள முடியும். மேலதிகமாக தவிடு மற்றும் இதர அடர்வுத் தீவனங்களை வழங்குவதன் மூலம் வேகமான வளர்ச்சி வீதத்தையும் தரமான இறைச்சியையும் பெற முடியும்.

### இலங்கையின் பன்றி வகைகள்

உள்ளூர்ப் பன்றி
காட்டுப் பன்றி
லான்ட்ரேஸ்
டியூராக்
கலப்பினப் பன்றி

### பன்றிக் குட்டிகளைப் பராமரித்தல்

1.பல் உடைத்தல் -

பன்றிகளுக்கு இயல்பாக வளரும் வேட்டைப் பல்லை பிறந்து சில மணி நேரத்தில் அடியோடு உடைக்க வேண்டும். இதன் மூலம் பால் குடிக்கும் போது தாயின் முலையைக் காயப்படுத்தாமல் பாது காப்பதோடு எதிர்காலத்தில் சண்டையிடுவதால் ஏற்படும் தேவையற்ற காயங்களையும் தடுக்கலாம்.



2.இரும்புச்சத்து ஊசி :-

பன்றிக் குட்டிகள் இரும்புச்சத்துக் குறைவால் பாதிக்கப்படும். எனவே 2 மில்லி லீற்றர் இரும்புச்சத்து ஊசியை பிறந்த 3 மற்றும் 10 ஆவதுநாளில் செலுத்த வேண்டும் இரும்புச்சத்துக் கொண்ட களிகளையும் (paste) பாவிக்கலாம். அல்லது குட்டிகளின் கூட்டில் மண்ணைப் பரவி விடலாம்.

3.வால் வெட்டுதல் :-

வால்களை மாறி மாறிக் கடிப்பதால் ஏற்படும் தேவையற்ற நிறை இழப்பைத் தவிர்க்கலாம். சில பன்றிகள் பிறந்து 12 முதல் 72 மணி நேரத்தில் வாலினை வெட்டி விடுதல் வேண்டும்.

4.ஆண்மை நீக்கம் :-

ஆண்மை நீக்கம் செய்த பன்றிகளை இறைச்சி சுவையாகவும் தேவையற்ற மணம் இல்லாமலும் இருக்கும். பிறந்து 3 கிழமைக்குள் ஆண்மை நீக்கம் செய்யலாம்.













### பன்றிக் கொட்டகை

வளரும் பன்றிகளுக்கு 8 - 15 சதுர அடியும் பருவமடைந்த பன்றிகளுக்கு 20 சதுர அடியும் குட்டி போடும் மற்றும் ஆண் பன்றிகளுக்கு 65 சதுர அடியும் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

### குடற்புழு நீக்கம்

பிறந்து இரண்டு மாதமளவில் பன்றிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யலாம். வளர்ந்த பன்றிகளுக்கு வருடத்துக்கு இருமுறையாவது குடற்புழு நீக்கம் செய்தல் சிறப்பு. பன்றிகளை இனச்சேர்க்கை செய்ய இரண்டு கிழமைக்கு முன்பு குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும். சினையான பன்றிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தலை தவிர்க்கலாம். இதர பல பன்றிகளுக்கும் ஒரே நேரத்தில் குடற்புழு நீக்கம் செய்யலாம்.

### பெண் பன்றிகளைத் தெரிவு செய்தல்

அதிக முலைச் சுரப்பிகளைக் கொண்டதாகவும் அதிக குட்டிகளை ஆரோக்கியமாக ஈனக் கூடியதாகவும் சிறந்த பரம்பரை இயல்புகளை கொண்டதாகவும் பெண் பன்றிகளை தெரிவு செய்தல் வேண்டும்.

### ஆண் பன்றிகளைத் தெரிவு செய்தல்

நோய் நிலைமைகள் இன்றியும் கால்கள் மற்றும் உடல் அமைப்பு உறுதியாகவும் விதைப்பைகள் சாமாந்தரமா



கவும் குறைபாடுகள் அற்றும் சிறந்த பரம்பரை இயல்புகளைக் கொண்டும் இருத்தல் வேண்டும்.

### இனச்சேர்க்கை கொள்கை

இலங்கையில் லார்ஜ்வைட் (large white) மற்றும் லான்ட்ரேஸ் (landrace) இனப் பன்றிகளை கலப்பு செய்வதில் இருவழிக்கலப்பு (tow way cross) எனவும் மேலதிகமாக டியுரக் (duroc) இனப் பன்றிகளை கலப்பாது மூவழிக் கலப்பு (three way cross) எனவும் இனக்கலப்பு செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

பெண் பன்றிகள் ஆறு மாதமளவில் பருவத்துக்கு வரும். ஏழு மாதத்தில் இனச்சேர்க்கை செய்யலாம். வருடத்தில் இரண்டு முறை குட்டி ஈனும் ஆண் : பெண் விகிதம் குறைந்துது 1 : 1 ஆக இருக்க வேண்டும் சினை காலம் 114 நாள்கள்.

பெண் பன்றி முதல் ஈற்றில் 6 - 8 குட்டிகள் வரை ஈனுவதோடு போகப் போக 12 குட்டிகள் வரை ஈனும் குட்டிகளை விரைவாக பால் குடி மறக்கச் செய்வதன் மூலம் தாய்ப் பன்றியை அடுத்த இனப்பெருக்க வட்டத்துக்குத் தயார் செய்ய முடியும்.

### பன்றிகளுக்கு ஏற்படும் நோய்கள்

பன்றிக் காய்ச்சல் [Swine fever]
ஜப்பானீஸ் என்சபளைடிஸ் [Japanese encephalitis]
கால்வாய் நோய் [foot and Mouth disease]
மடியழற்சி [Mastitis]
சொறி [Dermatitis]
சுவாச நோய் [Respiratory infection]
வயிற்றோட்டம் [ Diarrheal ]

நோய் நிலைமைகள் தென்படும் பட்சத்தில் கட்டாயம் அருகிலுள்ள கால்நடை வைத்தியரை நாட வேண்டும்.

# யாழ். பல்கலை விஞ்ஞான பீடத்தின் 'விஞ்ஞானம்' சர்வதேச ஆய்வு மாநாடு!







யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் அனல் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'விஞ்ஞானம்' சர்வதேச ஆய்வு மாநாடு இம்முறை நோர்வே நாட்டின் மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்புடன் 'புதிய இயல்பு நிலையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முன்னிறுத்தல்' எனும் தொனிப்பொருளில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகள் (Jaffna University International Research Conference – JUICE 2022) வரிசையில் இடம்பெற்ற இம் மாநாட்டில் நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியாவின் பிரபல்யமான பல்கலைக்கழகங்களை சேர்ந்த விஞ்ஞானப் பேராசிரியர்கள் கருத்துரைகளை வழங்கினர். உயிரியல் விஞ்ஞானம், இரசாயன - பௌதிக விஞ்ஞானம், கணனி - தகவல் தொழில் நுட்பம், சக்தி - சூழலியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம் - புள்ளிவிவரவியல், விஞ்ஞானக்கல்வி எனும் உப தலைப்புக்களில் சர்வதேச மற்றும் இலங்கை ஆராச்சியாளர்களால் 43 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த மாநாட்டுக்கு நோர்வே நாட்டின் இலங்கைத் தூதரகம், நோர்வேயின் திறன் மற்றும் உயர் கல்விக்கான பணிப்பாளர் அலுவலகம் என்பன நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு நிகழ்வுகள், இணைய வழியிலும் நேரலையாகவும் இடம்பெற்றன.

# கரைச்சி கல்வி கோட்ட ஆசிரியர்களுக்கு எரிபொருள் பெற ஏற்பாடுகள் இல்லை!

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(இ.கலையமுதன்)

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சி கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க கல்வி வலயத்தினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இதுவரையில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சி கோட்டத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெறுவதற்கான எரிபொருள் பங்கிட்டு அட்டையை வழங்குவதற்கு கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த விடயத்தில் கரைச்சி கோட்டக்கல்வி பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பணிப்பாளர் ஆகியோரே இதற்கு முழு பொறுப்பாகும்.

ஆகவே இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஆசிரியர்களுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டையை வழங்குகின்ற செயற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு கண்காணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ரயில்வே கட்டணத்தை அதிகரித்து மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவதை ஏற்கமுடியாது!

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் போர்க்கொடி

இலங்கை ரயில்வே திணைக்களத்தினது வருமானத்தை அதிகரிப்பதற்கு பல வழிகள் காணப்பட்டாலும் ரயில் பயணக் கட்டணத்தை மாத்திரம் அதிகரித்து பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரட்ண தெரிவித்தார்.

ரயில்வே போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டிய தேவை காணப்பட்டாலும், போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள வீதத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

போக்குவரத்து மற்றும் பொதிகள் சேவைகள் கட்டண திருத்தம் தொடர்பாகப் பொது மக்களுக்கு தெரிவிப்பதற்கான போதிய கால அவகாசம் இல்லை என்பதுடன், ரயில்வே நிலையங்களில் கணக்குப் பதிவு மற்றும் அது தொடர்பான பணிகளுக்கு ஒரு நாள் போதாது. ஆகவே, எதிர்வரும் முதலாம் திகதி முதல் புதிய ரயில் போக்குவரத்து கட்டணத்தை அமுல்படுத்துவது சிறப்பாக இருக்கும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இம்மாதம் 22 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ரயில் போக்குவரத்து கட்டணம் திருத்தப்பட்டமைக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 21 ஆம் திகதியன்று அமைச்சர் பந்துல குணவர்தனவால் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, கட்டண திருத்தம் தொடர்பாகப் பயணிகளுக்கு தெரிவிக்க போதிய கால அவகாசம் இல்லை என்றும், ரயில் நிலைய கணக்குப் பதிவுகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் வழங்குமாறும் குறிப்பிட்டு ரயில் நிலைய அதிபர் சங்கத்தினர் இலங்கை ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளருக்கு எழுத்து மூல ஆவணமொன்றின் மூலம் அறிவித்துள்ளனர்.

# வேட்பாளர்கள் இருவரும் எமது கோரிக்கைகளை ஏற்காததாலேயே நாம் தேர்தலை பகிஷ்கரித்தோம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் கருத்து

(க.கிருபாகரன்)

எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக் கொண்டு, அங்கீகரிக்கக் கூடிய தலைவரை ஆதரிப்பதாகவே நாம் முடிவெடுத்திருந்தோம். அதற்கமைய சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்கா ஆகியோர் எமது தலைவருடன் தொடர்பு கொண்டு, தங்களை ஜனாதிபதிக்கான தேர்தலில் ஆதரிக்கும்படி கேட்டிருந்தனர். அதற்கமைய எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்துரையாடி, எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நீண்டகாலமாக எமது மக்களுக்கெதிராக நடந்தேறும் அநியாயங்களையும் எடுத்துக்கூறி அதற்காக எமது தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கோரினர். இதனை இரு வேட்பாளர்களும் நிராகரித்திருந்த வேளையிலேயே நாம் தேர்தலில் பங்கு கொள்வதைத் தவிர்த்துக் கொண்டோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

தமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்ஊடக சந்திப்பு மட்டு.ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

உண்மையிலேய எங்களுடைய மக்கள் வழங்கிய ஆணைக்கமைய எமது கட்சியைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எமது கட்சிமீது நல்ல நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்குக் காத்திரமாக நாம் எதிர்காலத்திலும் செயற்படுவோம்.

இந்நிலையில் யார் ஜனாதிபதியாக வந்தாலும், அவர்கள் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒருவரை ஆதரிப்போமே தவிர, வெறுமனே தங்களுடைய பதவி நலன்களுக்காக எமது மக்கள் பிரதிநிதிகளைப் பயன்படுத்துவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

எமது மக்கள் கடந்த 72 வருடங்களாக தங்களுடைய இருப்புக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஜனநாயக வழிமுறையிலும், ஆயுதரீதியாகவும் போராடி, 2009 ஆம் ஆண்டில் பாரிய இன அழிவை எதிர்கொண்டனர்.

இதன் பின்னர் ஆட்சிப் பீடம் ஏறிய ஒவ்வொரு அரசாங்கங்களும் எமது மக்களை ஏமாற்றி, மக்கள் மீது நடந்த அநியாயங்களை நீத்துப் போகச் செய்திருக்கிறார்கள்.

அந்தவகையில் இந்த விடயங்களை நாங்கள் சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். 2009 இற்குப் பின்பு தமிழ் மக்களினுடைய ஆணையைப் பெற்றுக் கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு விசுவாசமாக நடக்காமல், வெறுமனே இந்தியா போன்ற நாடுகளின் நலன்களுக்காகவே செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.

அந்த நிலைப்பாடு நடந்த தேர்தலில் அவர்கள் நடந்து கொண்ட விதம் மூலம் மக்களுக்குப் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நல்லிணக்கம், இராஜதந்திரம் போன்ற பல்வேறு காரணங்களை இதற்காகக் கூறிவந்தார்கள்.

இந்நிலையில் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் விட்டுக் கொடுக்காது. இதற்கமைய தமிழ் மக்கள் எதிர்காலத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இதற்காக எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கரத்தைப் பலப்படுத்தும் வகையில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். - என்றார்.

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் - 04

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

### (07) புதிய திட்டங்கள்

வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு வெளியிடல் பற்றிக் கடந்த வாரம் பார்த்தோம். இவ்வாரம் செய்தியாளன் என்ற ஊடகத் தூது மடல் பற்றிப் பார்ப்போம்.

அத்துடன் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஏற்கனவே ஆற்றிய பணிகளை விளக்கும் நோக்கில் கடந்த வாரங்களில் வெளியிடப்பட்ட புகைப்படங்களின் தொடர்ச்சியாக மேலும் சில புகைப்படங்கள் இங்கு பதிவுக்காகத் தரப்படுகிறது.

### செய்தியாளன் ஊடகத் தூது மடல்

செய்தியாளன் என்ற இந்த ஊடகத் தூது மடல் ‘ஊடகத் தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம்’ என்ற விருது வாக்குடன் வெளியிடப்படும்.

செய்தியாளன் என்ற இந்த ஊடகத் தூது மடலின்



மூத்த ஊடகவியலாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்களின் மணிவிழா நிகழ்வில் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர் தனதீசன் தீசன் ஆகியோருடன்.

சின்னமானது செய்தியாளர்களின் பாரம்பரிய செய்திக் கருவியான பேனாவை நடுவில் தாங்கி நிற்கிறது. சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ மரக் கிளையினை வாயினில் காவி ஆங்கிலத்தில் செய்தியைக் குறிக்கின்ற நியூஸ் என்ற ஆங்கில வார்த்தையின் முதல் எழுத்துக்களான என் என்ற வடக்கு - ஈ என்ற கிழக்கு - டபிள்யு என்ற மேற்கு - எஸ் என்ற தெற்கு - ஆகிய நான்கு திசைகளையும் நோக்கிச் சமாதானப் பறவையான புறாக்கள் சிறகடித்துப் பறந்து ஊடகத் தூது விடுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர்கள் துல்லியம். நடுநிலமை, பக்கம் சாராமை என்ற ஊடகக் கோட்பாடுகளுடன் அறிவித்தல் - அறிவுறுத்தல் - விளக்குதல் - மகிழுவூட்டல் - வியாபாரம் செய்தல் என்ற ஊடகப் பணிகளின் செயற்பாட்டாளர்களாக



2012ஆம் ஆண்டு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இணைப்புப் பெற்ற பின்னர் உதவியாளர் ஸ்ரனிஸ்லோஸ் ஞானராஜாவுடன்.

பணியாற்ற வேண்டும். இந்த எல்லப் பணிகளையும் இணைத்து ஒரு கருத்துருவாக்கப் பணியை எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கொள்ள வேண்டும்.

உலகிலே மனித உயிருக்குப் பெறுமதியான எந்தச் செய்தியும் இருக்க முடியாது. காயம் அடைவதற்குப் பெறுமதியான எந்தக் காட்சிப் பதிவும் இருக்க முடியாது என்பது ஊடகவியலின் பொன்னான விதியாகும்.

இலங்கையில் பல தமிழ் செய்தியாளர்கள் செய்தியாகவே போயுள்ளனர் என்பது கடந்த 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் இரத்தத்தால் எழுதப்பட்ட காவியமாகும். செய்தியாகிப்போன செய்தியாளர் பற்றியும் செய்தியாளன் என்ற இந்த ஊடகத் தூது மடல் பேசும். இனியும் செய்தியாளர் செய்தியாகக் கூடாது என அறிவுறுத்தும். செய்தியாக வேண்டாம் என வலியுறுத்தும். அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைளை மேற்கொள்ள இயன்றவரை முயற்சிக்கும்.

செய்தியாளன் என்ற இந்த ஊடகத் தூது மடல் உலகின் செய்திகளை அறிக்கையிடும் செய்தியாளரின் அன்றாட அடிப்படைப் பணியான செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொள்ளப் போவதில்லை.


2012 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இணைப்பு பெற்ற பின்னர் நடந்த தொடக்க நிகழ்வில் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, தற்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை (அப்போதைய குரு முதல்வர்) மற்றும் யாழ்ப்பாணணம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கிருத்திகா தர்மராஜா - சுடர்விழி ராஜ்குமார் ஆகியோருடன்.

மாறாகச் செய்திகளை அறிக்கையிடும் செய்தியாளர் பற்றிய செய்திகளை அறிக்கையிடப் போகிறது.

எனவே இது ஒரு வளமையான செய்திப் பத்திரிகை அல்ல. இது செய்தியாளர்கள் பற்றிய செய்திப்பத்திரிகை.

இது அவர்களின் அன்றாட வாழ்வை - துறைசார் அறிவை - அனுபவத்தை -அவர்களின் சரித்திரத்தை - சாதனைகளை - அவர்கள் பற்றிய சம்பவங்களை - செய்திகளை - அவர்களின் சுக துக்க நிகழ்வுகளை மொத்தத்தில் அவர்கள் பற்றிய அனைத்தையும் அறிக்கையிடும். ஏன் அவர்களின் தோற்றுப் போன முயற்சிகளைப் பற்றிக் கூடப் பேசும்.

மனித சமுதாயத்தில் இருந்து கொண்டு தன் சமுகம் பற்றிய செய்திகளை - அவை தனக்கும் தான்


2020ஆம் ஆண்டு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் வெளியிட்ட 13ஆவது ஊடகவியல் நூலான ‘விசேட செய்தி அறிக்கையிடல்’ என்ற நூலின் அட்டைப்படத்தில் படம் பொறிக்கப்பட்ட குருநகரைச் சேர்ந்த றென்சிகுமார் றித்திக்சன் நூலின் பிரதியை தான் கல்வி கற்கும் பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஏ.திருமகன் அடிகளாரிடம் அர்ப்பணிக்கும் போது.

சார்ந்தவர்களுக்கும் எதிரானதாக இருந்தாலும் - அவற்றை அறிக்கையிட்டு விட்டு வெறும் இலக்கத்தில் ஒளிந்து கொள்ளும் செய்தியாளர் என்ற இந்த முகத்தைக் காட்டிக் கொள்ளாத மனிதர் பற்றியே இவ்விதழ் பேசப் போகிறது. காலத்தையும் நேரத்தையும் பொருட்படுத்தாது, ஓய்வு, உறக்கம் இன்றி அர்ப்பணத்துடன் அல்லும் பகலும் ஊர் உலகத்திற்காகப் பொது நலன் கருதி பணியாற்றி வரும் இந்தச் செய்தியாளர் பற்றி செய்தியாளன்


2012ஆம் ஆண்டு ‘புலனாய்வு அறிக்கையிடல்’ பற்றிய விரிவுரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய பினனர் ’புலனாய்வு அறிக்கையிடல்’ என்ற நூல் வெளியீட்டில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகத்துறை முதல் அணி மாணவர்களுடன்

என்ற இந்த ஊடக தூது மடல் பேசும்.

செய்தியாளனில் அறிக்கையிடப்படும் செய்திகள் கூடச் சுடச்சுட சூடாக அறிக்கையிடப்படாமற் போகலாம். அது இத்தூது மடலின் தன்மைக்கேற்ப தவிர்க்கப்பட முடியாததே.

ஆனால் செய்தியாளர் பற்றிய செய்திகளை - நடக்கின்ற, கிடைக்கின்ற தன்மைக்கேற்ப சுருக்கமாக, சுவையாகப் பதிவு செய்து கொண்டே இருக்கும். அறிக்கையிட்டுக் கொண்டே இருக்கும். ஆவணப்படுத்திக் கொண்டே இருக்கும். அவை பழையவையாக இருக்கலாம். புதியவையாகவும் இருக்கலாம்.

சில வேளை செய்தியாளன் ஊடக தூது மடலில் நம்மை நாமே புகழ்வதாகப் படலாம். அதாவது செய்தியாளர்களைப் பற்றி செய்தியாளர்களே புகழ்வதாகப் படலாம். எம்மை நாமே புகழ்ந்து, பாராட்டி செய்தியாளர்

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

வாழ்விற்கும் பணிக்கும் வளமும் உரமும் பெறுவது இந்தப்பணிக்குத் தேவையானதே.

இதனை வெளியிடுவது யார் என்பது இங்கு முக்கியமல்ல. இதனை வெற்றிகரமாக நகர்த்துவது


2019ஆம் ஆண்டு 10ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் ’தனிநாயகம் அடிகளின் பத்திரிகைப்பணி வழி தமிழ்ப்பணி’ என்ற ஆய்வுக்கட்டுரையை அமெரிக்கா சிக்காகோ நகரில் சமர்ப்பித்த பின்னர் மன்னார் மறைமாவட்டத்தைச் சோந்த தமிழ் நேசன் அடிகளார், எனது ஆய்வு மேற்பார்வையாளராகப் பணியாற்றிய இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த அமுதன் அடிகளார் (இந்தியா திருச்சி தனிநாயகம் அடிகள் நிலைய நிறுவுனர்) மற்றும் பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகளுடன்.



2006ஆம் ஆண்டு கிளிநொச்சி அறிவியல் நகரில் ‘தமிழ் ஊடக அறிவியற் கல்லூரி’யின் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் தலைமை ஏற்று நிகழ்த்தியபோது மறைந்த செய்தியாளர் சிவராம், பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் மறைந்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடன்.

இலங்கையில் செயதிப்பணி புரியும் அனைத்துச் செய்தியாளர்களின் பொறுப்பான பணியாகும்.

எந்த விதமான கோபதாப எண்ணங்களையும் வெறுப்புணர்வுகளையும் மறந்து செய்தியாளர் என்ற எண்ணத்தை மட்டும் மனதிற் கொண்டு இந்தப் பணியை வெற்றியாக்கவும் வீறு நடைபோட்டுப் பவனி வரவும் அனைத்துச் செய்தியாளர்களும் உங்கள் உதவிக் கரங்களை எம்மை நோக்கி அகல நீட்டுங்கள்.

உங்கள் தனிப்பட்ட நிறுவன அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகள், கட்டமைப்புக்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் சரியானவை. தேவையானவை. அவற்றைக் கண்ணியமாகப் பேணிக்கொண்டே செய்தியாளன் என்ற இந்த ஊடக தூது மடல் மூலம் ஊடக தூது விடுவோம் -ஊடக உறவுகளை இணைப்போம்.

# எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையை ஒரு சிலர் குழப்புவதற்கு முனைகின்றனர்!

## அனைவரதும் ஒத்துழைப்பைக் கோருகிறார் யாழ்.அரச அதிபர்

(கலையமுதன்)

பொதுமக்கள் பலரும் எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையின் நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒரு சிலர் இந்தத் திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆகவே, அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான எரிபொருள் விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மாவட்ட செயலர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பெற்றோல் விநியோகத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக வியாழக்கிழமை முதல் 29 ஆம் திகதி வரை நாளாந்தம் 15 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது. மக்கள் எந்தவித நெருக்கடியையும் ஏற்படுத்தாது அமைதியாக இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

டீசலை பொறுத்தவரை 8 தொடக்கம் 10 வரையான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 25 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதற்குரிய அட்டவணை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகம் ஆரம்பித்திருக்கின்ற நிலையில் பொதுமக்கள் ஒன்றுகூடி நெருக்கடியை ஏற்படுத்துகின்றனர் எனவும் அதேபோன்று எரிபொருள் பெறுவதற்குரிய விதிமுறை மற்றும் அறிவுறுத்தலை பின்பற்றாமலும் இருப்பதால் அங்கு ஒரு குழப்பமான நிலை உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றன.

ஆகவே, எரிபொருளை பெற்றுக் கொள்ளும் பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசாங்கத்தால் தேசிய எரிபொருள் விநியோக அனுமதிப் பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 25 ஆம் திகதிக்கு பின்னதாக கட்டாயமாக அமுலில் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் அந்த முறைமையை முழுமையாக அமுல்படுத்தும் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே பிரதேச செயலாளர்களால் வழங்கி இருக்கின்ற எரிபொருள் விநியோக அட்டைகளை பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இது யாழ்ப்பாண மாவட்டத்துக்கான விசேட ஏற்பாடு. இதை தேசிய முறைமையுடன் இணைந்த வகையில் கொண்டு செல்ல முடியும். நெருக்கடியை குறைப்பதற்கு அனைவருக்கும் முறையாக இந்த பங்கு அட்டை முறையை அமுல்படுத்தியிருக்கின்றோம்.

வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் இந்த விநியோகம் இடம்பெறும்.

எரிபொருள் விநியோக அட்டைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தை மிக மிக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிக்க ஒதுக்கி இருக்கின்றோம். அதில் எரிபொருளை நிரப்ப மாவட்ட செயலகத்தின் முன் அனுமதியை பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

பொதுமக்கள் பலரும் இந்தத் திட்டத்தினாலான நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒரு சிலர் இந்தத் திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே, அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும்எனக்கேட்டுக்கொள்கின்றேன்.
– என்றார்.

# இலங்கைக்கு கிடைக்கவுள்ள 700 கோடி அமெ. டொலர்கள்!

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 300 கோடி டொலர்களைப் பெறுவதற்கு இலங்கை தகுதி பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

சி.என்.பி.சி. ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலின் போது இதனைத் தெரிவித்துள்ளார். இந்த கடன் 3 வருட காலப்பகுதியில் தவணை முறையில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு பணத்தை வழங்க ஆரம்பித்த பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி (சர்வதேச நாணய நிதியம் வழங்கும் தொகைக்கு மேலதிகமாக) மேலும் 400 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி என்பது, கடுமையான பணப் பற்றாக்குறை உள்ள நாடுகளுக்கு உதவுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தால் உருவாக்கப்பட்ட ஒரு வசதி ஆகும்.

கடந்த காலங்களில் இலங்கை அதிகாரிகள் செய்த தவறுகளுக்கு பாடம் கற்பதற்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு சந்தர்ப்பம் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை மாற்றியமைக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரிகள் பாடம் கற்று, சரியான திசையில் செல்வதற்கும், சர்வதேச நாணய நிதிய திட்டத்திற்கு அப்பால் செல்வதற்கும் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் பல தசாப்தங்களாக நடந்து வரும் நிதி முறைகேடுதான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# ரணிலும் பதவி விலக நேரிடும் மஹேல எச்சரிக்கைப் பதிவு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக நேரிடும் என்று கிரிக்கெட் வீரர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவொன்றிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 9ஆம் திகதி காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியினரால் வெளியிடப்பட்ட டுவிட்டர் பதிவொன்றை மேற்கோள் காட்டியே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குறித்த டுவிட்டர் பதிவையும் உடடினயாக நீக்க வேண்டும் எனவும் மஹேல ஜெயவர்த்தன வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

மே 9ஆம் திகதி காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலை வன்மையாக கண்கின்றோம் எனவும், பிரதமர் மாத்திரமல்ல முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

எனவே தற்போது ஜனாதிபதியாக ரணில் பதவியேற்று 24 மணிநேரம் நிறைவடைவதற்குள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை சுட்டிக்காட்டியே மஹேல ஜெயவர்த்தன தமது டுவிட்டர் பதிவை வெளியிட்டுள்ளார்.

# இலங்கைக்கான பயணங்களை தவிருங்கள் தனது மக்களுக்கு பிரித்தானியா வலியுறுத்து

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக இலங்கைக்கான அத்தியாவசியப் பயணங்களைத் தவிர்க்குமாறு பிரித்தானியாவின் வெளிநாட்டு,பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

எனினும் இலங்கையின் சர்வதேச வானூர்தி நிலையத்தின் ஊடாக வான் போக்குவரத்துக்கு இந்த அறிவுரை பொருந்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல் மற்றும் வன்முறை அமைதியின்மை குறுகிய அறிவிப்பில் ஏற்படலாம். இதனைக் கருத்திற்கொண்டு தமது நாட்டு மக்கள், அரசியல் கூட்டங்கள் அல்லது எதிர்ப்புகளைத் தவிர்க்க வேண்டும் மற்றும் பாரிய கூட்டங்களின்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இலங்கையில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஜூலை 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் இரவு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த நாட்டில் குறுகிய அறிவிப்பில் மேலும் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்படலாம்.

இலங்கை, கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருவதால், மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை (டீசல் மற்றும் பெற்றோல்) போக்குவரத்து, வணிகங்கள் மற்றும் அவசர சேவைகளை இது பாதித்துள்ளது. மின்சார விநியோகத்தில் தினந்தோறும் தடை ஏற்படுகிறது. இதனால் போராட்டங்கள் மற்றும் வன்முறை கலவரம் ஏற்பட்டுள்ளது என்றும் பிரித்தானியாவின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளது.



# 10 ஆண்டுகளில் 180 கோடி டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது இந்தியா!

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் எடுத்துரைப்பு

இலங்கைக்கு இந்தியா கடந்த ஒரு தசாப்த காலத்துக்குள் 180 கோடி டொலர்களை கடன் வரிகளாக வழங்கியிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியன் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இந்திய லோக்சபாவில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறுப்பினர், எஸ். ராமலிங்கம் கேட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே, ஜெய்சங்கர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த காலப்பகுதிக்குள் 185.064 கோடி டொலர்களை இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார். தொடரூந்து, உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, எரி சக்தி, பெற்றோலியம் மற்றும் உரம் போன்றவற்றுக்காக இந்த கடன் வரிகள்வழங்கப்பட்டுள்ளனஎன்றுஅவர்தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா, தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.

அத்துடன் கடன்வரிகளுக்கு அப்பால் இந்தியா, இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளையும் வழங்கியுள்ளதாக ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-71

ஜே.வி.பியின் தொடக்க காலத்தில் இருந்தே அவர்களோடு சில தமிழர்கள் இணைந்து இருந்தார்கள். ஏன் ஜே.வி.பியின் விஜேவீர மற்றும் மூத்த தலைவர்களான லொக்கு அத்துல, பியதிலக, மில்டன் போன்றவர்கள் தமிழர் சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் பீக்கிங் (சீன) அணியின் பாசறையில் வளர்ந்தவர்கள் தான். அவர்களின் சுருக்கமான வரலாற்றை இனப்பிரச்சனையின் பார்வையில் இருந்து நோக்கினால் – 1971க்கு முன்னர் அவர்களது உருவாக்கம் – கொள்கைகள், 1971ஆம் ஆண்டின் புரட்சி, அதன் பின்னர் 1977 வரையான காலம், பொது வெளியில் 1983 வரை அரசியல் செய்த வருடங்கள், 1983இல் இருந்து மறைவிடங்களில் இயக்கமாகச் செயற்பட்டமை, 1987இல் இந்திய ஒப்பந்தத்தின் பின் இரண்டாவது புரட்சியை முன்னெடுத்தமை, 1989இல் விஜேவீர



வும் முக்கிய தலைவர்களும் அழிக்கப்பட்டமை, பின்னர் அரசியல் கட்சியாக இயங்கியமை எனக் கால வாரியாகவும் அவர்களது கொள்கைகளையும் மாற்றங்களையும் பார்க்கலாம்.

ஆனால் அவை விரிவானவையாகி விடும். ஆகவே அவற்றில் சிலவற்றையும், சில சம்பவங்கள், மனோபாவங்களையும் மாத்திரம் குறிப்பிடுகிறேன்.

இந்த மாறுபட்ட காலங்களில் அனேகமான தமிழ்ப் போராட்ட குழுவினருக்கு ஜே.வி.பி. போன்ற இடதுசாரிகளோடு நட்பும் நேசமும் இருந்தன. சில சமயங்களில் சேர்ந்தும் இயங்கினார்கள். புளொட் அங்கத்தவர்கள் அவர்களுடன் (ஜே.வி.பியினருடன்) இணைந்து சில வங்கிக் கொள்ளைகளையும் நடத்தினர். ஈரோஸ் இயக்கம் கொள்கை ரீதியில் ஜே.வி.பி. நடத்தும் தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கு ஆதரவு தந்தது. விடுதலைப் புலிகளின் பாலசிங்கம் கூட மார்க்சிசவாதியாக அவர்களை அனுசரணையுடன் பார்த்தார்.

ஆனால் அவர்களின் பார்வை எல்லாமே இனப்பிரச்சினைக்கு சோசலிஸ்ட் சிந்தனையில் அமைந்த தீர்வொன்றை முன்வைத்தனவே ஒழிய, தமிழ் மக்களின் தனித்துவத்தையோ சுய நிர்ணய உரிமையையோ, பாரம்பரியங்களையோ ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

இதனையேதான் எவ்வளவு தார்மீகங்கள் பேசப்பட்ட போதும் காலிமுகத்திடல் போராளிகளின் நிலைப்பாடாகவும் காணக் கூடியதாக இருந்தது.

1971 ஆண்டுக்கு முன்னைய காலங்களில் விஜேவீர கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ அணியிலிருந்து வெளியேறி தமிழரான பாலதம்புவின் கட்சியினால் தான் ஈர்க்கப்பட்டு அதில் சேர முயற்சித்தார். பாலதம்பு விஜேவீரவைச் சந்தித்துப் பல தடவை பேசிய பிறகு, தனது துணைத் தலைவரான எட்மண்ட் சமரகொடியிடம் அனுப்ப, அவருடன் இருந்த சில தனிப்பட்ட தகராறுகளால் அவரை விஜேவீர அணுகவில்லை.

விஜேவீரவுக்குத் தமிழர்கள் அந்தக் கட்சியில் அதிகாரம் வைத்துத் தன்னை அப்படியாக ஓரம் கட்டுகிறார்கள் என்ற மனோபாவம் வளர்ந்தது.

முன்னதாக, சண்முகதாசனின் சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, திறமையான பணிகளைச் செய்து, தேசிய ரீதியில் பல தொடர்புகளை ஏற்படுத்தி, அங்கும் சண்முகதாசனை வெளியேற்றும் முஸ்தீபுகளில் ஈடுபட்டு, அதனால் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு, பின்னர் சண்முகதாசன் கட்சியில் இணைந்திருந்த சிலருடனேயே ஜே.வி.பி. தொடங்கப்பட்டது


சண்முகதாசனை வெளியேற்ற விஜேவீர முன்வைத்த காரணங்கள் சுவையானவையாகவும், சிங்களத் தலைவர்கள் எந்த தரப்பில் இருந்து வந்தாலும், அவர்களது மனோபாவம் ஒரே மாதிரியாகவே பிரதிபலிக்கும் என்பதை வெளிப்படுத்துவனவாவும் அமைந்தன.

அவர் முன்வைத்த காரணம், சண்முகதாசன் ஓர் இனவாதி என்பதாம். அவர்கள் நாட்டின் தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கு முன்னணியாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைத் தான்



முன்னிறுத்துகிறார்கள், பாதிக்கப்பட்டுள்ள சிங்கள மக்களை புரட்சியின் முன்னணியில் வைக்கும் சிந்தனை அவர்களுக்குக் கிடையாது, மற்றது உண்மையான இடதுசாரித் தலைமைகள் இன்று தமிழர்களின் கைகளிலேயே உள்ளன, பாலத்தம்பு, சண்முகதாசன், மற்றது பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக கே.ஸி. நித்தியானந்தா போன்ற தமிழர்கள் முன்னிலையில் இருக்கின்றமை எல்லாம் சிங்களத் தொழிலாளர் பக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன், அது அவர்களின்(சிங்களவரின்) தேசியத்துக்கு நல்லது அல்ல, இவை ஏற்றுக் கொள்ளத் தக்கவை அல்ல, சிங்கள மக்களின் அரசியலில் தீர்மானம் எடுப்பவர்கள் சிங்கள மக்களாகவே இருக்க வேண்டும் – என்பதுதான் விஜேவீர தரப்பின் கருத்தாக இருந்தது.

1971ஆம் ஆண்டு காலங்களில் விஜேவீரவோ ஜே.வி.பியோ வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பற்றி எந்தவித சிந்தனையையும் எடுத்துக் கொள்ளவில்லை. வடக்கு, கிழக்குத் தமிழர்கள் நாட்டின் தேசியத்தின் ஒரு பகுதி, நாட்டுக்காக எடுக்கப்படும் தீர்மானம் அவர்களையும் கட்டுப்படுத்தும் என்று கணித்தார்கள்.





அவர்களது சீற்றமும் எதிர்ப்பும் இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கும், பெரும் முதலீடு செய்து வர்த்தகங்கள் நடத்திய இந்திய, பாகிஸ்தான் பிரஜைகளுக்கும் எதிராகவே இருந்தன. இலங்கை மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய வம்சாவளியினரை ஒட்டி அவர்களுக்குத் திருப்தி இல்லை. ஆனால் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பது நியதி. மற்றவர்கள் எல்லோரும் குடியுரிமை தரப்படாமல் திருப்பி அனுப்



பப்பட வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கொள்கையாக இருந்தது. மேலும் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த புறக்கோட்டை மொத்த, சில்லறை வியாபாரிகள், செட்டித் தெருவில் நகை வர்த்தகர்கள் மற்றும் குறிப்பாக ஜபர்ஜீஸ், ஹைதராமணி, குண்டன்மால்ஸ் போன்ற வியாபாரிகள் வெளியேற்றப்பட்டு, அவர்களது வியாபாரங்கள் தேசியத்துக்கு வர வேண்டும் என்ற கடும் கொள்கை அவர்களின் முதுகெலும்பாக இருந்தது.

அவர்கள் 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக முழுமூச்சுடன் புரட்சியில் இறங்கியமைக்கு அந்த ஒப்பந்தம் இங்கே இருக்கும் எல்லா இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பெரும் மூலதனம் விட்டு வியாபாரம் செய்த இந்திய, பாகிஸ்தான் வம்சாவளியினருக்கும், நிரந்தரப் பதிவுக் குடியுரிமையும் தந்ததுதான் காரணம். அவர்களைப் பொறுத்தமட்டில் அது இந்திய ஆக்கிரமிப்புதான்.

1971 புரட்சிக்கு பின் அவர்களது கொள்கைகளில் சில மாற்றங்கள் வந்தன. ஆனால் இந்திய விரிவாக்கம், தமிழர்கள் அதிகாரம் என்பவை தொடர்பான அவர்களின் பார்வை மற்றும் எண்ணக்கருவில் பாரிய மாற்றங்கள் வரவில்லை. அவற்றை அடுத்து பார்ப்போம்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை மக்களுடன் இந்தியா என்றும் மிக உறுதியாக நிற்கும்!

## டெல்லியில் வெளிவிவகாரப் பேச்சாளர் தெரிவிப்பு



நெருக்கடி நேரத்தில் இலங்கை மக்களுக்கு ஆதரவாக நிற்பது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சகம் கடந்த வியாழக்கிழமை மீண்டும் வலியுறுத்தியது, இலங்கைக்குப் பொருளாதார உதவிகளை வழங்குவதில் இந்தியா முன்னணியில் உள்ளது, அது தொடரும் என்று அவர் கூறினார்.

இலங்கைக்குத் தேவையான பொருளாதார உதவிகளை வழங்குவதில் இந்தியா முன்னணியில் உள்ளது. மேலும் தேவைப்படும் நேரத்தில் அதிகபட்ச உதவிகளை வழங்கிய நாடுகளில் நமது நாடும் ஒன்றாகும். எங்களால் முடிந்த வரையில் இலங்கை மக்களுக்கு ஆதரவாக நாங்கள் தொடர்ந்து நிற்போம் என வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அரிந்தம் பாக்சி வியாழக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியின் கீழ் இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பது குறித்த இந்தியாவின் பார்வை குறித்து ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த பாக்சி, "புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது குறித்து, உயர்ஸ்தானிகராலயம் அவர்கள் (இலங்கையர்கள்) முன்னெடுத்த ஒரு நாடாளுமன்ற செயல்முறை பற்றிய அறிக்கையை வெளியிட்டது. இந்த மாற்றம் அரசமைப்புக் கட்டமைப்பின் மூலம் நிகழ்ந்தது என்



பதையும், அந்த வகையில் இது ஒரு தெளிவான மற்றும் சாதகமான குறிகாட்டியாகும் என்பதையும் வலியுறுத் துவதைத் தவிர என்னிடம் அதிகம் சேர்க்க எதுவும் இல்லை." – என்றார் அவர்.

இந்த நேரத்தில் இலங்கைக்கான ஒரு குறிப்பிட்ட பொருளாதார பொதியை இந்தியா எதிர்பார்க்கிறதா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"அவர்களுக்குப் புதிய ஜனாதிபதி வந்திருக்கிறார். அவர்கள் அரசாங்கத்தை அமைப்பதற்கு முன் நடவடிக்கை எடுப்பார்கள். அவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினர். நாங்கள் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கியுள்ளோம், ஆனால் அதில் சில முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே நாங்கள் அதை அப்படியே பார்ப்போம்" – என்றார் அரிந்தம் பாக்சி.

முன்னதாக, வெளிவிவகாரச்ச்செய்தித்தொடர்பாளர், இந்தியா இலங்கையின் நெருங்கிய அண்டை நாடு என்றும், இரு நாடுகளும் ஆழமான நாகரிகப் பிணைப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்றும் கூறியிருந்தார். நெருக்கடியான காலங்களில் இலங்கை மக்களுடன் இந்தியா நின்றது, தொடர்ந்தும் அதைச் செய்யும் என்று அவர் உறுதிபடக் கூறினார்.

கடந்த ஜுலை 16ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தார்.

இலங்கையில் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று பாக்லே கூறினார். குறிப்பாக இந்த முக்கியமான தருணத்தில் ஜனநாயகம் மற்றும் அரசமைப்புக் கட்டமைப்பை நிலைநிறுத்துவதில் நாடாளுமன்றத்தின் பங்கை அவர் பாராட்டினார்.

'அண்டை நாட்டுக்கு முன்னுரிமை' என்ற எமது கொள்கையில் இலங்கை வகிக்கும் கேந்திர இடத்தைப் பின்பற்றும் வகையில், இலங்கையின் பாரதூரமான பொருளாதார நிலைமையை சீர்செய்வதற்காக இந்தியா இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

பிரதம மந்திரி நரேந்திர மோடியின் 'அயலகத்துக்கு முன்னிடம்' என்ற கொள்கையின் கீழ் இந்தியா, இலன்கை விடயத்தில் முதல் பிரதிபலிப்பாளராக உருவெடுத்தது.

நிதியுதவி விடயத்தில் அதன் பயனாளிகள் என்று அழைக்கப்படுபவர்க ளால் இலங்கை தனித்து – கை – விடப்பட்டது. இலங்கை அரசாங்கம் தன் நாட்டின் சிரமங்களைச் சமாளிக்க உதவி கோரியதும் இந்திய விரைந்து பதிலளித் துள்ளது.

உள்கட்டமைப்பு இணைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகளையும் மேம்படுத்தும் நிலைமை உருவானது.

ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30, 2022 வரையிலான காலத்தைப் பொறுத்தவரை இந்தக் கால கட்டத்தில் இலங்கைக்குக் கிட்டிய இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களின் பெறுமதி 376.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதுவே சீனாவைப் பொறுத்தவரை ஆக 67.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே.

செவ்வாயன்று, வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும், இலங்கை மிகவும் கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும், இந்தியா தனது 'அண்டை நாடு முதல் கொள்கையின்' ஒரு பகுதியாக மிகவும் மனிதாபிமான முறையில் அண்டை நாட்டின் நிலைமையை அணுகுவதாகவும் கூறியிருந்தார்.

ஏழு தசாப்தங்களில் இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ளது இச்சமயத்தில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை குறிப்பிட்டு, வேறு எந்த நாடும் இந்த அளவு ஆதரவை வழங்கவில்லை என்றார் ஜெய்சங்கர்.

இலங்கை அதிபராக ரணில் விக்கிரமசிங்கே கடந்த வியாழக்கிழமை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடந்த வாரம் ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்றார்.

முன்னதாக, ஆக்ரோமான எதிர்ப்பாளர்களால் அவரது மாளிகை முற்றுகையிடப்பட்டமையைத் தொடர்ந்து, ராஜபக்ஷ வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றமையை அடுத்து, இலங்கையின் இடைக்கால அதிபராக விக்ரமசிங்கே நியமிக்கப்பட்டார்.

1948 இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கை அதன் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது, இது தொடர்ச்சியான கொவிட் அலைகளின் உச்ச எழுச்சியின் கீழ் வருகிறது. பல ஆண்டுகால வளர்ச்சியை அது அச்சுறுத்துகிறது. ஐ.நாவின் நிலையான பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நாட்டின் திறனை கடுமையாக குறைமதிப்பிற்கு அது உட் படுத்துகிறது.

உற்பத்திக்கான அடிப்படை உள்ளீடுகள் கிடைக்காததாலும், மார்ச் 2022 முதல் நாணயத்தின் பெறுமதி 80 சதவிகிதம் வீழ்ச்சியடைந்தமையாலும், அந்நிய கையிருப்பு பற்றாக்குறை மற்றும் அதன் சர்வதேச கடன் கடமைகளை சந்திக்கத் தவறியமையாலும் நாட்டின் பொருளாதாரம் கூர்மையான வீழ்ச்சிக்குத் தள்ளப்பட்டுள்ளது.

உள்நாட்டு விவசாய உற்பத்தி குறைந்தமை, அந்நிய செலாவணி இருப்பு பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நாணயத் தேய்மானம் ஆகியவை பற்றாக்குறையை தூண்டியுள்ளன. பொருளாதார நெருக்கடி குடும்பங்களை பட்டினி மற்றும் வறுமையில் தள்ளும். உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, கொவிட் தொற்று நெருக்கடி காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே மேலும் அரை மில்லியன் மக்கள் விழுந்துள்ளனர்.

(மூலல்: ஏ.என்.ஐ.)

